திருக்கோயில்

ஜூன்
2000

விலை
ரூபாய் ஐந்து

குன்றத்தூரில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ''தெய்வச்சேக்கிழார் விழா'' 31.5.2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு நம் ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்றுச் சிறப்புரை ஆற்றிச் சிறப்பித்தார்கள். தொண்டைமண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள் – ஆசியுரை வழங்கினார்கள். திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ஏ. கோதண்டம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம், திருப்புகழ்ச் செல்வர் கவிஞர் மதிவண்ணன், ''திருக்கோயில்'' ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், கலைமாமணி கவிஞர் கே.பி. அறிவானந்தம், கோயிற்கலை வித்தகர் புலவர் எம்.கே. பிரபாகரமூர்த்தி ஆகியோர் ஆய்வரங்கத்தில் கலந்து கொண்டு ஆய்வுரை வழங்கினார்கள். இணை ஆணையாளர் திரு ஜி. இராஜநாயகம் பி.எஸ்சி., பி.எல்., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். சென்னை உதவி ஆணையாளர் திரு அ. சுப்பிரமணியம் எம்.ஏ., பி.எல்., மற்றும் திருமுறை கலாநிதி கலைமாமணி தருமபுரம் ப. சுவாமிநாதன் உள்ளிட்ட ஓதுவாமூர்த்திகள் பலரும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழ்	:	ரூ. 5.00
ஆண்டு உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 60.00
ஆயுள் உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 500.00

மாலை	திருவள்ளுவர் ஆண்டு 2031	விக்ரம ஆண்டு ஆனி	மணி
42	ஜூன் 2000		6

சிறப்பாசிரியர்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.

ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

திருப்பரங்குன்றம் வள்ளி தெய்வயானை உடனுறை
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி
(உற்சவர் திருக்கோலம்)

பொருளடக்கம்

இவர் தான் கடவுள்
- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,
ஆணையாளர், இந்து சமய
அறநிலைய ஆட்சித்துறை

மகான் பசவர் வாழ்வும் வாக்கும்
- முனைவர் த. அமிர்தலிங்கம்

கம்பரின் இராமாவதாரம்
- கம்பன்கவிநயமணி வே. தியாகராஜன்

இமாலயச் செலவு
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

மலேசிய நாட்டில் முருகன் கோமில்கள்
- அருள்ஞானி கல்பாக்கம் அடிகளார்

பதினெண் சித்தர்கள் - செவ்வேள்

திருக்கைமினால் பற்றப்பெற்ற திருத்தொண்டர்கள்
- சேது. சிவா.

சிவபெருமானைக் காண்பார் யார்?
- முனைவர் இரா. கோபாலகிருஷ்ணன்

திருக்கச்சி நம்பிகள் - திருமதி கோமதிராகவன்

மலரும் மனிதமும், புலரும் புனிதமும்
- திருமிகு இராஜேஸ்வரி விசுவநாதன்

வினாவும் விடையும் - பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

தென்குமரியில் திருவள்ளுவர் சிலை
கவிஞர் முருகுவண்ணன்

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி: *8279407*

இவர் தான் கடவுள்

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,
ஆணையாளர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.

1. தவறு செய்தால் தண்டனை வழங்கிடுவார்
தவறுக்கு உரித்தான தண்டனை வழங்கிடார்
தவறுக்குச் சிறிதான தண்டனை தந்திடுவார்
தவறான தீர்ப்பினைத் தண்டனையில் கொடுத்திடார்.

2. சிறிய நன்மை செய்திடினும் மகிழ்ந்திடுவார்
பெரிதாக நன்மையைப் பதிலுக்குச் செய்திடுவார்
முக்கிய பிரமுகர்கள் அவருக்குத் தெரியாது
முயலாதவர்க்கு முன்னுரிமை அவரிடம் கிடையாது.

3. கல்லான மனிதர்க்குக் கனிந்திட மாட்டார்
கள்ளமில்லா மனிதர்க்குக் களிப்பினைத் தந்திடுவார்
மண்ணாலே கோயில் கட்டினாலும் மயங்குவதில்லை
மனத்தாலே கட்டினால் குடியேறத் தயங்குவதில்லை.

4. முன்வினையால் முயற்சிகளைத் தோற்றிடச் செய்திடுவார்
முயற்சிக்காக மெய்வருத்தக் கூலி தந்திடுவார்
நல்வினையைச் செய்யும் முயற்சிக்கு உதவிடுவார்
வருவினையைத் தடுக்க முயல்வோரை வாழ்த்திடுவார்.

5. பிறவிக்கு அவரே காரணமாய் இருந்திடுவார்
பிறவி நீங்கவும் பயிற்சிக்களம் தந்திடுவார்
நல்லோர்க்கு மட்டுமே முக்தியை அளித்திடுவார்
எல்லோர்க்கும் கிடைத்திட சந்தர்ப்பம் கொடுத்திடுவார்.

மகான் பசவர் வாழ்வும் வாக்கும்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

லிங்காயதம் எனப்படும் வீரசைவ சமயத்தை வளர்த்தவராகிய மகான் பசவர், கருநாடக மாநிலத்தில் கி.பி. 1105-இல் தோன்றி. 1167 முடிய வாழ்ந்தவர் ஆவார். அம்மகானை அன்பில் புத்தராகவும், அடக்கத்தில் மகாவீரராகவும், தியாகத்தில் ஏசுவாகவும், தீரத்தில் முகம்மதுவாகவும் கூறுவர்.

கருநாடக மாநிலத்தில் இன்றைய பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள இங்குளேஸ்வரர் பாகவேதி கிராமமே அவர் அவதரித்த தலம். அவர் மாதிராசர், மாதலாம்பிகை தம்பதிகளுக்குப் புதல்வராக வைகாசிப் பௌர்ணமி நாளில் அவதரித்தார்.

அவர் பிராமணர் குலத்தில் தோன்றியவர், என்றாலும் பிராமண குல வழக்கப்படி 8-வது வயதில் நிகழ்த்தப்பெறும் பூணூல் சடங்கை அவர் தமக்கு வேண்டாமென மறுத்துள்ளார். அவர் பிறந்த போதே மார்பில் சிவலிங்கம் அணிந்தவராய்ப் பிறந்தாரெனக் கூறப்படுகிறது.

''எனக்கு ஏற்கெனவே கூடல சங்கமேசக்கடவுளால் லிங்கதாரணம் செய்யப்பட்டிருக்கிறது. சாதி பேதம் பாராட்டும் வைதிக சைவ சமயத்தை வெறுக்கிறேன். எல்லோரும் சமம் எனும் வீர சைவ சமயத்தை ஏற்கிறேன்'' என்பதாக அவர் கூறித் தம் எட்டாவது வயதிலேயே பூணூல் மறுத்த புரட்சியைச் செய்துள்ளார்.

இதனால் தந்தைக்கும் மகனுக்குமாக மனக்கசப்பு நேரிட்டபடியால், பசவர் தம் பெற்றோரை நீங்கி, 40 கி.மீ. தொலைவில் இருந்த கூடல சங்கமத்தை அடைந்து, அவ்வாலயத்தில் வீற்றிருந்த ஜாதவேத முனிவரிடம் சமய உண்மைகளை விளங்கிக் கொண்டாரென அவருடைய வரலாறு உரைக்கப்படுகிறது.

நம் தமிழ் நாட்டில் சீர்காழிப்பதியில் தோன்றி சைவம் வளர்த்த திருஞான சம்பந்த நாயனாரைப் போல கருவிலே திருவுடையவராகத் திகழ்ந்தவர்தாம் மகான் பசவர். கன்னட மொழியில் அவர் யாத்துள்ள 1250-க்கும் மேற்பட்ட 'வசனங்கள்' எனப்படும் அருட் கவிதைகள் அவருடைய பெருமையை விளக்குகின்றன.

அவருடைய அருட்கவிதைகளின் சிறப்புக்குச் சான்றாக இருவசனங்களைக் காட்டலாம்.

'அரசர் மனையில் அரசியாய் வாழ்வதினும்
அடியார் மனையில் அடிமையாய் வாழ்வது உயர்ந்தது

ஏனெனில்

'அபிடேக நீர்கொண்டுவா' 'மலர்கொண்டுவா'
'இலிங்கத்துக்கு நிவேதனம் தா' என்பர்
கூடல சங்கமனின் பெருமனையில்
'அடியார் மிச்சில் உண்பாய் சேவகனே' என்பரன்றே''

(வசவண்ணர் வாக்கமுது)

'செல்வர் சிவன் கோயில் அமைத்தார்
நான் என் செய்வேன்? ஏழையேன் ஐயா
என்கால்களே கம்பங்கள், உடலே கோயில், தலையே பொற்கலசம், கூடல சங்கமதேவா அசையாப் பொருளுக் கழிவுண்டு, அசையும் பொருளுக் கில்லை ஐயா'

(வசவண்ணர் வாக்கமுது)

இத்தகைய பக்தி வசனங்கள் ஆயிரத்திற்கும் மேல் அவர் யாத்திருப்பன பயிலப் பயில கனகல்லையும் கரைய வைப்பனவாய் உள்ளன.

ஆன்மீக ஞானியாய்க் கூடல சங்கமத்தில் வாழ்ந்திருந்த பசவரை அரசியல் வித்தகராயும் சிறப்பிக்கத் திருவுளம் கொண்டான் போலும், கூடல சங்கமேஸ்வரன். ஈசனின் திருவுளவாணைக்கிணங்கக் கூடல சங்கமம் நீங்கி காளச்சூரி விச்சல மன்னன் ஆண்டுக் கொண்டிருந்த கலியாணிமாநகருக்கு வருகை தந்த பசவர், அம் மன்னனின் தலைமைக் கருவூல அதிகாரியாகப் பொறுப் பேற்றுக் கொண்டார். இதற்குக் காரணமானவர் பசவரின் தாய்மாமனும் விச்சல மன்னனிடம் அமைச்சராக இருந்த வருமான பலதேவர் ஆவார்.

கலியாண நகரில் விச்சலமன்னனின் தலைமைக் கருவூல அதிகாரியாக மகான் பசவர் பொறுப்பேற்றிருந்த நாளில்தான் வீரசைவ சமயம் வளர்க்க அரும் பெருஞ் செயல்கள் பல ஆற்றியுள்ளார். அவரால் தமிழ் முச்சங்கங்களோடு ஒப்பிடத்தக்கதான 'சிவானுப மண்டபம்' என்ற சமய அமைப்பு கலியாணி நகரில் நிறுவப் பெற்றது.

அச்சிவானுப மண்டபத்தில் லிங்கம் அணிந்த வீரசைவர் அனைவரும் கூடி, சமூக மேன்மைக்கான திட்டங்களை ஆய்ந்து ஆலோசித்து முடிவெடுத்துள்ளனர். அவருள் ஆண்பெண் என்ற பேதம் இல்லை, இன்ன

தொழிலர் - இன்ன இடத்தவர் என்ற பேதங்களும் இல்லை.' அம்மண்டபத்தில் அரசரும் ஆண்டியும் ஒருவரே. தலைவர் தொண்டர் என்ற பாகுபாடும் இல்லை. எல்லோரும் சரி சமம்.

இத்தகைய பேதமற்ற ஒற்றுமை உணர்வு அச் சிவ்னுப மண்டபத்தில் நீக்கமற நிறைந்திருந்த தன்மையைக் கீழ்க்கண்ட மகான் பசவரின் வசனங்கள் தெளிவு படுத்துகின்றன.

"நல்லாடை புனைந்து பெருமைக் குரியனாய்வந்த
ஜங்கமன் சிறந்தவனென்றும்
கந்தல் அணிந்துவந்த ஜங்கமன் இழிந்தவனென்றும்
கருதினே னாயின் பஞ்சமா பாதகன் ஆவேன் நான்.
உணவு உடை பொருள் ஆகியவற்றின் அடிப்படையில்
அடியவரை இரண்டுபடுத்தி நான் கண்டால்
நரகத்திலிடுவான் கூடல சங்கமதேவன்''
(வசவண்ணர் வாக்கமுது)

''குதிரையேறி வருபவரைக் கண்டால் விழுந்து புரண்டு
காலைப் பிடிப்பர்
ஏழைஅடியவர் வந்தால் 'இடமில்லை அப்படிப்
போ' என்பர்
அத்தகையவரைக் கீழே தள்ளி மூக்கை யறுப்பான்
என் ஆண்டான் கூடல சங்கம தேவன்''
(வசவண்ணன் வாக்கமுது)

ஆகிய வசனங்கள், சொல் அளவில் மட்டுமல்ல, செயல் அளவாலும் மகான் பசவராலும் மற்ற வீரசைவ ஜங்கமர்களாலும் போற்றப்பட்டன.

மகான் பசவரின் சிவானுபவ மண்டபத்தில் 'அருளய்யா' என்ற வீரசைவரும் உறுப்பினராய் இருந்தார். அவர் இஷ்டலிங்கம் தரித்து ஈசனைத் தொழும் பேரன்பினர்; ஆயினும் மிதியடி தைக்கும் தொழிலே தொண்டாய்ப் பேணியவர்.

''வேலைக்காரி மகனாயினும், வேசிமகன் ஆயினும்
சிவதீட்சை யான பிறகு சிவனென்றே வணங்குங்கள்
பூசியுங்கள்
திருவடிநீர் பிரசாதம் அவரிடமிருந்து பெறுவதே
பொருத்தம்
இவ்வா றன்றிப் புறக்கணிப்பவர்க்குப்
பஞ்சமா பாதக நரகம், காணாய், கூடலசங்கமதேவா''

''யாராயினுமென்?
ஸ்ரீமகா தேவனை நினைப்பவனின் வாய்த் தாம்பூலம் மெல்லுவேன்; அவன்களைந்தெறிந்த ஆடையை அணிவேன். அவன் செருப்பைக் காத்து உய்வேன். கூடல சங்கம தேவா.''

போன்ற அருள்மொழிகளின் நெறியிலே வாழ்பவர்களே வீரசைவர்கள். ஆகவே, அருளய்யாவும்கூட அவருடைய தொழில் காரணமாகச் சிறுமைப் படுத்தப் படாமல் அவரும் சிறந்த வீரசைவராகவே மற்ற வீர

சைவர்களால் மதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

ஒரு நாள் அருளய்யா தம் தொழில் நிமித்தமாக கலியாணி நகரத் தெருவொன்றில் வந்து கொண்டிருந் தார். அப்போது பக்தி பண்டாரமாம் பசவரும் அவ் வழியே வரக்கண்டு 'வணக்கம்' கூறினார். மகான் பசவரும் அருளய்யாவிற்கு 'வணக்கம், வணக்கம்' என இரு முறை வணக்கம் செய்து, அருளய்யாவின் நலம் வினவிச் சென்றார்.

ஒருமுறைக்கு, இருமுறைகளாக வணக்கம் கூறிய மகான் பசவரின் பெரும்பணிவினால் தாம் மனபாரமுற் றவரானார் அருளய்யா. தம் மனபாரத்தை எவ்வகையிலே னும் தீர்த்துக் கொள்ள விரும்பிய அவர், தம் வலது தொடையிலிருந்தும் தம் மனைவி கலியாணம்மாவின் இடது தொடையிலிருந்தும், வேண்டிய அளவு சதையை வெட்டியெடுத்துப், பதப்படுத்தி மகான் பசவர் அணியத் தக்க அழகிய மிதியடிகளாக செய்து முடித்தார்.

அம்மிதியடிகளின் நேர்த்தியும் பொலிவும் கண்ட மகான் பசவர், அவை அருளய்யா கலியாணம்மா ஆகிய இருவரின் தொடைச் சதையால் செய்யப் பெற்றவை என்பதை உணர்ந்து அம்மிதியடிகளை வணங்கி, தாம் தலையில் அணியத்தக்க அம்மிதியடிகள், தாள்களில் அணியத் தக்கன அல்ல, சிவபெருமானே அணிவதற்கு உரியன அவை என்று கூறி, அருளய்யாவே அவற்றை வைத்துப் பூசிக்குமாறு கூறி அனுப்பி விட்டார்.

அப்புனித மிதியடிகளுடன் அருளய்யா தம் இல்லத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது விச்சல மன்னரிடம் அமைச்சராக இருந்தவரான மதுவராசா என் பவர், அம்மிதியடிகளின் மாண்பினை அறியாமல் தாம் அணியத் தருமாறு அருளய்யாவை வற்புறுத்தினார். அரு ளய்யா மறுத்தபோது வலுவில் வாங்கி அவற்றை அணிய வும் முற்பட்டார். அவர் தம் கால்களால் அருளய்யாவின் மிதியடிகளைத் தீண்டிய அளவிலே, அனல்பட்டாற் போல் அங்கம் தகிக்க மயங்கிக் கீழே விழுந்தார்.

மருத்துவர்கள் செய்த பல சிகிட்சைகளும் பலன் அளிக்கவில்லை. மதுவராசாவின் தேகத்தை எரித்த பெரு நெருப்பு தணியவே இல்லை. நிகழ்ந்ததைக் கேள்வியுற்ற மகான் பசவர், அமைச்சர் மதுவராசாவைக் கண்டு அவர் நோய் தணியும் வழியினைக் கூறி உதவினார். அரு ளய்யாவின் வீட்டுப் பாத்திரத்தில் உள்ள நீரைக் கேட்டுப் பெற்றுக் குளித்தால் குணம் கிட்டும் என்பதை மகான் பசவர் கூறியும் ஏற்றார் இல்லை மதுவராசா.

தாம் அந்தணர், அருளய்யா ஹரிஜன் என்ற நினைவே மிகுந்திருந்தது அவருக்கு. வீரசைவர் அருளய்யா விடம் தாம் நடந்து கொண்ட தகாத முறைக்கான தண்ட னையே தம்முடலை எரிவிக்கும் நோய் என்பதை அவர் அறியவில்லை. இந்நிலையில் தந்தைதுடிப்பதைக்காணச் சகியாதவளாகிய மதுவராசாவின் மகள் லாவண்யா அரு ளய்யாவின் இல்லம் சென்று, கலியாணம்மாவிடம் கேட்டு, அவர்கள் வீட்டுப்பாத்திரத்தில் இருந்த நீரைப் பெற்று வந்தாள்.

அமைச்சர் மதுவராசா அந்நீர் அருளய்யாவின் வீட்டு நீர் என்பதே அறியாமல் குளித்தார். கொடிய நெருப் பில் இட்டதைப் போல் வாடிக் கொண்டிருந்த அவர், அந்நீரில் குளித்த உடனே எரிச்சல் முழுவதும் நீங்கிக் குணம் பெற்றார். அந்நீர் அருளய்யா வீட்டு நீரே என்ப தைத் தம் மகள் அதற்குப்பிறகு கூறக் கேட்ட மதுவ ராசா, அருளய்யாவின் பெருமையை உணர்ந்தார்.

பொன்னையும் பொருளையும் பல தட்டுகளில் வாரி எடுத்துக்கொண்டு அருளய்யாவின் இல்லம் அடைந்த மதுவராசா தம்பிழையை மன்னித்துத் தம் காணிக்கையை ஏற்குமாறு வேண்டினார். 'தேவைக்கு அதிகமான பொருளை வைத்திருப்பவன் வீரசைவன் ஆகான்' என்பதை அறிவுறுத்திய அருளய்யா மதுவராசா வின் பொருட் காணிக்கையை ஏற்க மறுத்தார்.

எவ்வாறேனும் அருளய்யாவுடன் தம் அன்பைப் பகிர்ந்து கொள்ள விரும்பிய மதுவராசா, தம் அன்பு மகள் லாவண்யாவையேனும் அருளய்யா மருமகளாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென வற்புறுத்தினார். தாமும் இஷ்டலிங்கம் தரித்து வீரசைவர் ஆகிவிட உறுதி பூண்டு விட்டபடியால், வீரசைவக் குடும்பத்தார்க்குள் நடக்கும் இத்திருமணம் மறுக்க முடியாதது என்றும் அவர் தெரி வித்தார்.

மகான் பசவர் முன்னின்று நடத்தி வைக்க வீர சைவர் மதுவராசா மகள் லாவண்யாவிற்கும், வீரசைவர் அருளய்யா மகன் சீலவன்தாவிற்கும் சிவானுப மண்டபத் தில் வீரசைவ அன்பர்கள் அனைவரும் வாழ்த்து கூற, திருமணம் இனிதே நடைபெற்றது. இவ்வாறு நிகழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருமண நிகழ்ச்சியால் வீர சைவர்களில் பேதமில்லை என்ற பேருண்மை புல னாகும்.

''சிவனடியான் சண்டாளன் ஆனால் என்ன? அவனே
நற்குலத்தான்
நம்பியும் நம்பா திருப்பவன் சந்தேகி காண்
இலிங்கம் உள்ள இடத்தில் தீட்டுண்டோ?
ஜங்கமன் உள்ள இடத்தில் குலமுண்டோ?
பிரசாதம் உள்ள இடத்தில் எச்சிலுண்டோ?
தந்தையோ எங்கள் மாதர சென்னையன்,

பாட்டன் எங்கள் டோஹர டக்கையன்
சிற்றப்பன் எங்கள் நெம்மையன் காணீர்
அண்ணன் எங்கள் கின்னர பொம்மையன்
இவ்வாறிருந்தும் என்னை ஏன் அறியத் தவறினாய்
கூடல சங்கம தேவா''

இவையெல்லாம் மகான் பசவரின் வசனங்களே. இவற்றில் கூறப்பட்டுள்ள மாதரசென்னையன், டோஹர டக்கையன், நெம்மையன், கின்னர பொம்மையன் ஆகியோர் வெவ்வேறு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களே. அவர்களை எல்லாம் தம் உறவினராகவே கூறியுள்ள பசவரின் அன்பின் பெருமை மகிழ்ந்து போற்றுதற்குரியது.

லாவண்யா - சீலவன்தா திருமணத்தை நடத்தி வைத்ததனால் மகான் பசவருக்கு நேர்ந்த சோதனைகளை இனிக் காண்போம்.

கலியாணியின் மன்னன் விச்சலன், மகான் பசவரிடத்தில் பெருமதிப்பு கொண்டவன் ஆயினும் அவன் வீரசைவ சமயத்தினன் இல்லை. வைதீக சைவன். (அவனைச் சமணன் என்றும் சிலர் கருதுகின்றனர்) வைதீக சைவர்கள் மகான் பசவர் பூணூல் சடங்கை மறுத்துரைத்த அவருடைய இளமைக்காலம் முதலே அவர்மீது பொறாமை கொண்டிருந்தார்கள்.

மகான் பசவர் கலியாணி மன்னன் விச்சலனிடம் தலைமைக் கருவூல அதிகாரியாகி, சிவானுபவ மண்டபம் அமைத்து, லிங்கம் அணிவித்து அனைத்து இன மக்களையும் பேதமின்றி வீரசைவராக்கியது வைதீக சைவர்களின் பொறாமைத் தீயை மேலும் வளர்த்தது.

கிருஷ்ணபேடி, கேசவப்பட்டா, விஸ்வசேனா, முராரி கிரமிதா, வாசுதேவ கெய்சா முதலான வைதீக சைவர்கள் பலர் பசவர்மேல் பொறாமை கொண்டவராய் 'பொக்கிஷத்தைக் களவாடி பசவர் வீரசைவர்களுக்கு அன்னதானம் செய்கிறார்'' என ஏற்கெனவே ஒரு முறை மன்னனிடம் முறையிட்டிருந்தார்கள்.

அதனால் ஐயமுற்ற விச்சலனும் திடீரென்று முன்னறிவிப்பில்லாமல் பொக்கிஷத்தைச் சரி பார்த்தான். பொக்கிஷக் கணக்குகள் எல்லாமே சரியாக இருந்தன.

மகான் பசவரும் தம் வசனத்தில் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு

ஊரின் அருகே பால்பெருகிப் புரண்டோடும்போது பாலுக்கென முரட்டுப் பசுவை நான் ஏன் நாடுவேன்? வெட்கம் கெடுவேனோ? நாணம் இழப்பேனோ? கூடல சங்கம தேவனின் குறையாச் செல்வமிருக்க விஜ்ஜலனின் கருவூலத்துக் காசை படுவேனோ நான்?''

- வசவண்ணர் வாக்கமுது.

எனப்பாடியிருக்கிறார்.

இவ்வாறு பலமுறை பசவர் மேல் பழிசுமத்தி தோல்வியே கண்ட வைதீக சைவர்கள், மகான் பசவர் நடத்தி வைத்த சீலவன்தா - லாவண்யா திருமணத்தைப் பழி கூறினர். மகான் பசவர் அனைத்து இனத்தாரையும் வீரசைவராக்கி வீர சைவ அடியார்களின் தொகையைப் பெருக்கி, விச்சனின் ஆட்சியைக் கைப்பற்றவே சதி செய்வதாக வைதீக சைவர்கள் மன்னன் விச்சலனை அச்சுறுத்தினர்.

அவர்களின் அச்சுறுத்தலுக்கு விச்சலனும் பலியானான். மணமகள் லாவண்யா, மணமகன் சீலவன்தா, அருளய்யா, மதுவராசா ஆகிய நால்வரையும் சிறையில் அடைத்தான். அவர்கள் மணவிலக்கு பெற்றாலன்றி மன்னிக்க முடியாதென வற்புறுத்தினான்.

மகான் பசவர் மன்னன் விச்சலனைக் கண்டு தாம் நடத்தி வைத்த திருமணத்தில் பாவம் ஏதும் இல்லை என்று கூறி, மணமக்களையும் அவர்களுடைய தந்தைகளையும் விடுவிக்குமாறு வேண்டினார்.

''நீர் வாழ் உயிர், நிலம்வாழ் உயிருடன் கலப்புக் கொள்ள முடியாதபடி இயல்பிலேயே படைக்கப்பட்டுள்ளது. அது கடவுள் செய்தது. பறவையினமே ஆயினும் புறா குருவியுடன் கலப்புக் கொள்ள முடியாதபடி இயல்பிலேயே படைக்கப்பட்டுள்ளது. அதுவும் கடவுள் செய்தது. ஆனால் பிராமணர் வைசியருடன் கலப்புக் கொள்வதும், சூத்திரருடன் கலப்புக் கொள்வதும், இயல்வது தான். ஆகவே, அந்தக் கலப்பை ஆண்டவன் மறுப்பதில்லை. மனிதர்களில் பேதம் இல்லை'' என்று தெளிவுறுத்தினார் மகான் பசவர்.

மன்னன் விச்சலனுக்கு மகான் பசவரின் கருத்து ஏற்புடையதாகவே இருந்தது என்ற போதும், பசவர் சிவானுபவமண்டபத்தை நடத்துவதும், வீரசைவ அடியார்களைப் பெருக்குவதும் தம்மைக் கவிழ்க்கும் பொருட்டே என்று வைதீக சைவர்கள் கூறக் கேட்டுக் குழம்பியிருந்த விச்சலன், பசவர் சிவானுபவ மண்டபத்தை கலைத்தால் அன்றிச் சிறைப்பட்டவரை விடுவிக்க இயலாது என்று அதிகாரம் செய்தான்.

ஆணைக்கு அன்றி, அன்பிற்கே அடிபணியும் பெம்மான் பசவர், சிவானுபவ மண்டபத்தைக் கலைக்க இயலாதென்று கூறி, தலைமைக் கருவூல அதிகாரியின் பொறுப்பிலிருந்து தாம் விலகிக் கொள்வதாகக் கூறிப் பதவியைத்துச்சமென் அக்கணமே விட்டார். அந்நிலையில் அவர் பாடிய வசனம் வருமாறு:

''என்சொல்லைத் தவறாகக் கொண்டு ஆரவாரம்
செய்யட்டும்
பிறந்த குழந்தைகளை ஒன்பது துண்டுகளாக்கிக்
கொல்லட்டும்
என்மனைவியை என் கண்ணெதிரிலே
கூடிக் கொள்ளட்டும் -
இவை மூன்றும் புறத்தன.

வாசகர் எண்ணங்கள்

திருக்கோயிலின் மார்ச், ஏப்பிரல் இதழ்கள் வாராத குறையை 'மே' இதழ், தீர்த்துவிட்டது. ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் அவர்களின் ''வருமுன் காப்போம்'' கவிதையில் கண்டுள்ள சிந்தனை பாராட்டிற்குரியது.

- ராஜ், வளசரவாக்கம், சென்னை - 87.

''குறைந்த சுமை, நிறைந்த சுகம்'' எனும் இரயில் பயணத்தை வாழ்க்கைப் பயணத்துடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ள ஆணையாளர் அவர்களின் ''வருமுன் காப்போம்'' கவிதை அருமையிலும் அருமை.

- பழநியப்பன், கோவை.

சித்தாந்த வித்தகர் ஆறுமுகம் அவர்களின் ''செயற்கரிய செய்வர் பெரியர்'' கட்டுரை படித்து நெகிழ்ந்தேன் மகிழ்ந்தேன்.

- குமார், ஈரோடு

திருப்புகழ்மாமணி அவர்களின் ''இமாலயச் செலவு'' அருமை. நேரில் சென்று வந்தது போல் உள்ளது.

- இராஜேஸ்வரி, சென்னை.

இவைபோதாவென என்மேல் வரட்டும் - என்னுடலைத்
துண்டுதுண்டாக வெட்டட்டும், கழுவில் ஏற்றட்டும்
கொடுவாட்கள் பற்பலவாய்த் துணிக்கட்டும்
பின்னும் இலிங்கபூசை செய்வேன், சங்கம
பூசை செய்வேன்
பிரசாதம் தவறவிடேன். இவ்வென் மொழிகள் சிறிது
பொய்த்தாலும் என் மூக்கறுப்பாய் கூடலசங்கமதேவா''

- வசவண்ணர் வாக்கமுது

மகான் பசவர் பதவி நீத்த அளவிலும் நெஞ்சத் தூய்மை கொண்டானில்லை விச்சலன். பசவர் கலியாணியில் இருந்தால் தம் அரச பதவிக்கு ஆபத்து என்பதாக அவனே நினைத்து அச்சம் கொண்டவனாய் மகான் பசவரைக் கலியாணி நகரை விட்டே வெளியேறுமாறு ஆணை பிறப்பித்தான். வீரசைவர் அனைவருக்கும் பாடமாய் இருக்கட்டுமெனக் கொடுங்கோலன் விச்சலன், புதுமணமக்கள் சீலவந்தா - லாவண்யா இருவரின் கண்களைப் பறித்துக் களிறேற்றிக் கொன்றான். அருளய்யாவும் மதுவராசாவும் கூட கொல்லப்பட்டனர்.

கலியாணி நகரில் விச்சலன் செய்த இக்கொடுங்கோன்மை செயல்களைக் குறித்த மகான் பசவரின் வசனம் வருமாறு:

''பாம்பின் படம்கொண்டு கன்னத்தைச் சொறிந்ததுபோல
எரியும் கொள்ளியால் தலைச்சிக்கை எடுத்ததுபோல
புலியின் மீசை பிடித்து ஊசலாடுவது போல
கூடல சங்கமன் சரணரொடு விளையாடினால்
சுண்ணாம்புக் கல்லை மடியில் கட்டி மடுவில் விழுந்தது
போலாம்''

- வசவண்ணர் வாக்கமுது

இவ்வாறு மகான் பசவர் பாடியிருப்பதற்கேற்ப சீலவந்தா, லாவண்யா, அருளய்யா, மதுவராசா ஆகிய வீரசைவர்களைக் கொன்று விளையாடிய விச்சலனின் நிலையும் பாம்பின் படம் கொண்டு கன்னத்தைச் சொறிந்தது போலாயிற்று. ஆம்! விச்சலனும் இந்நிகழ்ச்சி நிகழ்ந்த அடுத்த சில நாட்களிலேயே அரண்மனையில் கொல்லப்பட்டுக்கிடந்தான்.

விச்சலனின் கொலைக்குக் காரணம், அவனால் வஞ்சிக்கப்பட்ட அரசியல் பகைவர்களா அல்லது அவனால் இம்சிக்கப்பட்ட வீரசைவ சரணர்களா என்பது இன்னும் ஆய்விற்குரியதாகவே உள்ளது.

அரசியற் காரணங்களுக்காக அல்லது சமய காரணத்திற்காக விச்சலன் கொல்லப்பட்டிருப்பினும், அவன் நாடிய வன்முறை அவனையே கொன்றொழித்தது என்பதே உண்மை.

கூடலசங்கமேஸ்வரனின் ஆணைப்படி, கல்யாணி நகருக்கு வந்து வீரசைவம் வளர்த்த மகான் பசவர் மீண்டும் கூடல சங்கமே சென்று, சிவனுடன் ஐக்கியமானார்.

''கிழமையறியேன், நாளறியேன், ஏதும் அறியேன் ஐயா,
இருளென்றறியேன், பகலென்றறியேன், ஏதும்
அறியேன் ஐயா
நின்னைப் பூசித்து என்னை மறந்தேன் கூடலசங்கமதேவா,
ஏற்றால் ஏற்றுக் கொள், ஏற்காவிடில் இதைத் தெரிந்து
கொள் ஐயா
இறைவன் ஒளியை மனத்தில் கொண்டு தெரிந்து
கொள் ஐயா,
கூடல சங்கமதேவனில் நான் இணைந்து விட்டேன் ஐயா.''

- வசவண்ணர் வாக்கமுது

கம்பரின் இராமாவதாரம்

– கம்பக்கலைமணி வே. தியாகராஜன்

புண்ணியவான் புண்ணிய நதிக்கரை வந்தார்

காட்டிலே இராமலட்சுமணருடன் அன்று தங்கிய குகப்பெருமான், இராமபிரான் நாடாளவேண்டிய நல்ல தினத்திலே காடு செல்ல நேர்ந்த வரலாற்றை இலக்குவன் மூலம் அறிந்து ''இராமபிரானைத் தன் நாட்டிலே பிறக்கும்படியான பேற்றையடைந்தும், அப் பெருமானால் அரசாட்சி செய்யும் பேற்றையடைந் திலது போலும் இப்பூமி'' என வருந்தினான். (பெரு நிலக்கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலும் என்னா).

மாலையில் தெய்வீகக் கடன்களைச் செய்து முடித்த இராமபிரான் இலக்குவனால் விரிக்கப்பட்ட புல்லாலான படுக்கையில் சீதாபிராட்டியுடன் தூங்க, இலக்குவன் காலை வாயளவும் தம்பி இமைப்பிலன் காத்து நின்றான். பொழுது விடிந்ததும், அக்கரை செல்ல ஓடங்கள் கொண்டுவருமாறு குகனைப் பணித்தார் இராம பிரான். இது கேட்டு, இராமபிரானைப் பிரிய நேருகிறதே என்று வேதனையடைந்த குகன், சீதாராமர்களை அடி பணிந்து ''காட்டுவாசிகளான எங்களுக்குப் பொய் பேச வராது. வலிமையுள்ள வேடர்களாகிய நாங்கள் உமக்கு அடிமை செய்வோம். தாங்கள் இங்கேயே தங்கி வாழ வேணும். இங்கு தேனும் தினைமாவும் கிடைக்கும். எங்கள் உயிரே உங்களைக் காக்கும். பிராட்டியுடன் விளையாடப் பரந்த மைதானங்களும் நீராடக் கங்கையும் உள்ளது. உடுக்க உடையாகத் தோல்கள் உள்ளன. உறங்குதற்கு மரங்களில் பரண்கள் உள்ளன. பகலில் வசிக்க குகைகள் உள்ளன. என்ன வேண்டுமானாலும் கொண்டுவந்துதர நாங்கள் உள்ளோம். வலிமையுள்ள ஆயிரக்கணக்கான வேடர்கள் உங்களுக்கு ஏவல் செய்ய உள்ளனர். இங்கேயே தங்கலாமே'' எனக் கூற இராம பிரான் ''காட்டிலுள்ள புனித நீர்களில் நீராடி மாமுனிவர் களை தரிசித்துத் திரும்பி வரும்போது மீண்டும் உன் னிடம் இருப்பேன்'' என்றார். ஓடங்களில் ஏறி அக்கரை சேர்ந்தபின் ''சித்திரகூடம் செல்லும் வழியாது?'' என இராமபிரான் கேட்க, குகப்பெருமான் ''காடுவழி பூரா வும் நான் அறிவேன். காய்கனி கிழங்குகள் தேடித்தரு வேன். குடிசைகள் கட்டுவேன். நீங்கள் அடியேனுடன் தங்காவிட்டாலும், நான் உங்களுடன் கூட வரவிரும்பு கிறேன். உத்திரவளித்தால் என் சேனையுடனேயே வரு கிறேன்'' என்றார்.

குகப்பெருமானுடைய அன்பு கண்டு மகிழ்ந்த இராமபிரான் ''நீ என் உயிர் போன்றவன். என் தம்பி உன் தம்பி. சீதாபிராட்டி உன் அண்ணி. இவ்வுலகெலாம் உன்னுடையது. நான் உன் அடிமை. நம் தந்தை யாகம் செய்து எங்கள் நால்வரையும் பெற்றார். அவரது தியாகம் உன்னை எனக்குத்தந்துள்ளது. இனி நாம் ஐந்து உடன் பிறப்புக்கள். அயோத்தியை உன் தம்பி அரசாள்கின்றான். வேடுவர் குலம் என்னுடையது. இதை நீ அரசு செய்வா யாக. மீண்டு வரும்போது உன்னைச் சந்திப்பேன்'' எனக் கூறி குகப்பெருமானிடம் விடை பெற்றுச் சித்திரகூடம் சென்றார்.

சீதா ராமலட்சுமணர்களான மூவரும் காட்டில் நுழைந்தனர். ''ஒவ்வொரு வகைக் காய்கனியும் ஒவ்வொரு பருவத்தில் விளைவது நாம் காண்கிறோம். ஆனால் காலம் பாராது எல்லாவிதக் கனிகளும் கனிந்து விளைந்தன. காடுபூராவும் நல்லதொரு மணம் வீசியது. பெண்கள் நடனமாடுவது போல் செடி மரக்கிளைகள் அசைந்தாடின. நல்லொழுக்கம் உள்ளவருக்கு எல்லாமே கிடைக்கும். நல்லொழுக்கமே நல்ல தவம் போலும்'' என்கிறார் கவிஞர்.

காலம் இன்றியும் கனிந்தன கனி; நெடுங்கந்தம்
மூலமின்றியும் முகிழ்த்தன நிலன் உற முழுதும்
கோலமங்கையர் ஒத்தன கொம்பர்கள் - இன்பச்
சீலம் அன்றியும் செய்தவம் வேறு உளதோ?

காட்டிலுள்ள அழகிய காட்சிகளைக் காட்டிக் கொண்டு இராமபிரான் சித்திரகூடம் அடைகிறார். மாலை நேரத்தில் பெண் குரங்குகள் முன்செல்ல ஆண்குரங்குகள் தத்தம் மரங்களை நோக்கிச் சென்றன. வீட்டிற்குடைய இல்லாள் முன் செல்ல வீட்டுத்தலைவர் பின் சென்றார் போலும். ஆண்யானைகள் நீர்த்தடங்களில் முன்னே இறங்கி நீர் குடிக்கப்பின்னே பெண் யானைகள் நீர் குடிக்க வந்தன! மனைவியின் மீதுள்ள அன்பினால் அவை நீர்ச் சுழியில் அகப்படக்கூடாதென முன்னெச்சரிக்கையுடன் ஆண் யானைகள் வந்தன என்கிறார். மிருகங்களில் கூட ஆண் பெண் ஒற்றுமையைக் காட்டுகிறது கவிச்சித்திரம்''.

மந்தியும் கடுவனும் மரங்கள் நோக்கின:
தந்தியும் பிடிகளும் தடங்கள் நோக்கின:
நிந்தையில் சுகுந்தங்கள் நீளம் நோக்கின
அந்தியை நோக்கினான் அறிவை நோக்கினான்.

பறவைகள் தத்தம் கூடுகளுக்கு வரும் மாலைப்பொழு தில் சில மலர்கள் மலர்ந்தன. தாமரைகள் போன்ற மலர்

கள் குவிந்தன. அந்த மாலை நேரத்தில் இராமன், இலக்குவன், சீதை மூவரும் கைகளும் கண்களும் குவிய மாலை நேர வழிபாடு செய்தனர் என்கிறார் கவிஞர்.

மொய்யுறு நறு மலர் முகிழ்த்தவாம் சில:
மையறு நறு மலர் மலர்ந்த வாம் சில:
ஐயனோடு இளவலுக்கும் அமிழ் தருளுக்கும்
கைகளும் கண்களும் கமலம் போன்றவே.

சித்திரகூடத்தில் இலக்குவன் தன் அண்ணனும், அண்ணியும் தங்குவதற்குக் குடிசையமைக்கிறார். அன்னியர் எவராவது வந்தால் சீதாபிராட்டி தனியாக ஒய்வெடுத்துக் கொள்ளுவதற்காக வேறிடம் அமைத்தனன் மிதிலை நாடிக்கும் என்கிறார். தன் தம்பி குடிசை அமைப்பது கண்டு வேதனையுற்ற இராமபிரான் ''தரையில் நடந்தறியா சீதாபிராட்டியின் பாதங்கள் பலகாதங்கள் நடந்தன. என் தம்பியின் கைகள் பர்ணசாலையமைக்கின்றன. ஏது மில்லாத நிலைமை வந்தால் எந்த வேலை வேண்டு மென்றாலும் செய்ய வரும் போலும்'' என நினைந்து உருகினார்.

மேவு கானம் மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன
தாவில் எம்பிகை சாலை சமைத்தன
யாவை யாதும் இலார்க்கு இயையாதவே.

அகந்தையற்ற சிந்தை, வேதம், பாற்கடல், வைகுந்தம் ஆகியவற்றில் தங்கும் திருமாலாகிய இராமபிரான் தன் தம்பி அன்புடன் சமைத்த குடிசையில் தங்கினார்.

மாய நீங்கிய சிந்தனை : மாமறை :
தூயபாற்கடல் வைகுந்தம் சொல்லலாம்:
ஆய சாலை அரும் பெறல் அன்பினன்
நேய நெஞ்சின் விரும்பி நிரம்பினான்.

★ ★ ★

இது இவ்வாறாக, கேகய தேசத்திலிருந்த பரதன் கோசல தேசத்திலிருந்த தூதர் கொணர்ந்த ஓலையை வாங்கிப் பார்த்து, கோசலதேசத்திற்கு பொழுதும் நாளும் குறிக்காமல் புறப்பட்டு வந்தார். கோசலத்தின் தலைநகர் நோக்கி வந்த போது ''வயல்களில் வேலை செய்யும் உழவர்களைக் காணோம். மாலைகளையணிந்து மகிழ்ச்சியுடன் விளங்கும் இளைஞர்களைக் காணோம். வயல்களில் எப்போதும் நிரம்பியுள்ள நீரையும் காணோம். இந்த நாட்டின் செழுமைக்குக் காரணமான திருமகளின் வாசத்தையே காணோமே!'' என வருந்தினார். பொலிவு இழந்த அயோத்தியைக் கண்டு வேதனை கொண்டு ஊருக்குள் புகுந்த பரதனை ''உன் அன்னை அழைக்கிறாள். வேகமாக வருக! (கூயள் அன்னை குறுகுதிர் ஈண்டு) என ஒரு தோழி அழைக்க, கைகேயியின் அரண்மனையுள் நுழைந்து அவள் கால்களில் விழுந்து வணங்க, ''கேகய தேயத்தில் என் தாய், தந்தை; தங்கைமார்கள் நலமா?'' எனக் கேட்க, தசரதரையும் இராம பிரானையும் காண ஆவல் கொண்டிருந்த பரதன் ''எல்லாம் சுகந்தான்'' என்றார். அடுத்து ''அம்மா! அரசர் எங்கே!'' எனக் கேட்ட பரதனுக்கு ''உன் தந்தை வானக மெய்தினார் வருந்தாதே! நீ'' என்றாள் கைகேயி. திடுக்கிட்ட பரதன் ''என் தந்தையா

இறந்தார்? காதில் நெருப்பையிட்ட மாதிரி இத்தகைய செய்தியை உன்னைத்தவிர என்னிடம் கூறுவார் யார்?'' என அலறிய பரதன் ''எந்தையே'' தருமத்தையும் கருணையையும் மறந்து நீ இறந்துவிட்டாய்! பெருமானே! இராமபிரானைப் பிரிந்து உன் உயிர் எவ்வாறு நீங்கியது? இராமபிரானுக்குத் திருமணம் செய்து பார்த்த கண்களால் அப்பெருமானின் பட்டாபிஷேகம் செய்துபார்க்க நீ புண்ணியம் செய்யவில்லையா?'' என அலறிய பரதன், ''இனி எனக்குத்தாயும் தந்தையும் இராமபிரானே! அவர் எங்கே? ''எனக்கேட்க'' அவர் தன்மனைவி தம்பியுடன் காடுசென்றார் ''எனக் கைகேயி கூற'' இன்னும் எவ்வளவு கெட்ட செய்திகளைக் கேட்கப்போகிறேன். அவர் ஏன் காடு செல்ல வேண்டும்? என் இராமபிரான் குற்றம் செய்யத் தெரியாதவராயிற்றே! தந்தை இறந்தபின் தமையனார் காடு சென்றாரா! இருக்கும்போதே காடு சென்றாரா? என்று கேட்க கைகேயி ''உன் தந்தை உயிருடனிருக்கும்போது தான் காடுசென்றார்'' என்றாள். ''பெற்றவன் இருக்கப் பிள்ளை காடுசென்றது ஏன்?'' எனக்கேட்க கைகேயி ''உன் தந்தையிடம் வரம் வாங்கி அரசை உனக்கு ஆக்கினேன். இராமனைக் காடு செல்லச் செய்தேன். அது தாங்காமல் அரசர் உயிரை விட்டார்'' எனக் கூறக் கேட்ட பரதன், அவள் தன் தாய் என்பதையும் மீறி அவளைக் கொல்ல எண்ணினவர், ''இராமபிரான் கோபிப்பாரே'' எனத் தயங்கி, ''நீ ஒரு நோய்! நோய் கூட ஒருவனைக் கொன்றவுடன் கூட அழிந்து விடும். எனவே, நீ ஒரு பேய்; பேய் கூட ஒரு தடவையில் அடித்து மனிதரை அழித்து விடும். ''தந்தை இறந்தார். தமையன் காடு புகுந்தார்'' என அடிமேல் அடிவைத்த மாதிரி கூறும் நீ இன்னும் இருக்கலாமா? வாய்மை மீறாத அரசனைக் கொன்று அழித்து அரசை நீ அடைய எண்ணி தயரதரையும் இராமனையும் - கன்றையும் தாயையும் பிரித்த மாதிரி காரியம் செய்துவிட்டாயே; நீ என் தாயுமல்ல, நான் உன் மகனுமல்ல'' என அலறிக்கொண்டு கௌசலையின் அரண்மனையையடைந்து அவள் காலில் விழுந்து அலறினார். கௌசலை ''கைகேயி செய்த வஞ்சனை உனக்கும் தெரியாமலா நடந்தது?'' எனக் கேட்க ''அன்னையே! நான் அறிந்து இராமபிரானான என் அண்ணனுக்கு துரோகம் நினைப்பவருக்கு உடந்தையானால் தருமத்தை அழித்தவன், கருணையற்றவன், முன்கோபம் உடையவன், தவஞ்செய்பவர்க்குத் துயரிழைத்தவன், குரு, பெண் முதலானவரைக் கொலை செய்தவன், போரில் புற முதுகுகாட்டி ஓடியவன், தாயைப்பட்டினி போட்டுத் தான் மாத்திரம் உணவு கொண்டவன், வேத வேதியர் வீட்டில் தீவைத்தவன், கன்றுக்கும் பால் விடாது கறந்து உண்டவன், நன்றி கெட்ட பாவி, கன்னிப் பெண்ணையும் குருவின் மனைவியையும் கெட்ட நோக்கத்துடன் பார்த்தவன், நல்ல குலத்தில் பிறந்தவருக்கு மாசு கூறியவன், பொய் சாட்சி கூறியவன், போருக்குப்போக அஞ்சியவன் முதலானவருக்குக் கிடைக்கும் கொடிய நரகம் எனக்கும் கிடைக்கும்'' என அலறிய பரதனைக் கண்டு கௌசலை பரதன் தூய்மையானவன் என அறிந்தார்.

பரதன் திரும்பி வந்ததறிந்து எண்ணையில் போட்டுவைத்திருந்த தயரதனின் உடலை வெளியில் எடுத்துப் போட்டிருந்தனர். அவ்வுடலைக் கண்டு அலறி மேலே விழுந்து தன் கண்ணீரால் தன் தந்தையின் உடலைக் கழுவினான். தன் தந்தைக்கு ஈமக்கடன் செய்ய விரும்பிய பரதனை **''அன்னை செய்த தீமையால் உன்னைத்தன் மகனல்ல என தசரதர் துறந்து விட்டார். எனவே நீ கருமம் செய்யக்கூடாது''** என வசிட்டர் தடுத்தார். சத்துருக்கன் அக்கடமைகளைச் செய்தார்.

பத்து தினங்கள் கருமங்கள் முடிந்ததும் சபையைக் கூட்டி ''உன் தந்தை இறந்தார். உன் அண்ணன் காடு சென்றார். அன்னையின் வரத்தின் மூலம் அரசு கிடைத்தது. நீ இதை ஏற்கலாமே'' என வசிட்டர் கூற, ''அண்ணனுக்குத் துரோகம் செய்யக் கூடிய கலிகாலம் இன்றே வந்துவிட்டதோ?'' என அலறிய பரதன் ''காடு சென்று இராமபிரானிடம் அரசை அளிப்பேன். அவர் ஏற்றுக் கொண்டால் திரும்பி வருவேன். இல்லாவிட்டால் அயோத்திக்குள் நுழைய மாட்டேன்!'' எனச் சபதம் பூண்டு ஊர் மக்களுடன் புறப்பட்டு கங்காநதிக்கரையை அடைந்தார். கவிஞர் 'காவிரிக்கரை போன்ற கழனிகள் நிறைந்த கங்காதீரம்'' எனக் கூறுகிறார்.

தமிழ்நாட்டுப் புலவனுக்கு கங்கையைக் காட்டிலும் காவிரி புனிதமானது. கங்கையில் நீராடினால் புண்ணியம் கிட்டும். ஆனால் காவிரியை நினைத்தாலே புண்ணியம் என்பர். **கங்கையின் புனிதமாய காவிரி** என்பது தொண்டரடிப் பொடியாழ்வார் வாக்கு. காவிரிக்கரையின் அழகை ரசிப்பவனே **(காவேரி தீரரசிகாயை நம:)** என்பது இறைவனின் மந்திரங்களில் ஒன்று. கங்கையையும் தாழச் செய்யும் காவிரி சூழ்ந்த திருவானைக்காவில் வாழும் அகிலாண்ட நாயகியே **கங்கை தாழ் பொன்னி சூழ் திருவானைக்கா அகிலாண்ட நாயகியே** என்றும் புலவர் நாவிரி பாவிரி காவிரி என்றும் மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடியருளினார்கள்.

ஈதலும் பல கோலாகல பூசையும்
ஓதலும் குண ஆசார நீதியும்
ஈரமும் குரு சீர்பாத சேவையும் மறவாத
ஏழ்தலம் புகழ் காவேரி யால்விளை
சோழமண்டலம்

என்பர் திருப்புகழாசிரியரான அருணகிரிநாதர். கம்பரே தெய்வீகமான காவிரியை நிகர்த்த கோதாவரி என்பர். **தெய்வப் பொன்னி எனலாய புனலாறு.**

அத்தகைய புண்ணிய நதிக்கரை வந்து சேர்ந்தார் புண்ணிய உருவான பரதன் என்கிறார் கவிச்சக்கரவர்த்தி.

(தொடரும்)

இமாலயச் செலவு

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

(முன் தொடர்ச்சி)

எங்களால் திரிலோகநாதரை நேரில் காண முடியா மல் போனாலும் அங்குள்ள மூர்த்தியின் அழகினைக் கொண்ட படத்தைப் பார்த்ததும் அதைக் காண கண் கோடி வேண்டும், மேலும் நேரில் கண்டு மகிழ பல கோடி நெஞ்சம் வேண்டும், விழிகளில் உயிரைத் தேக்கி வைத்துக் கொண்டு பலகாலம் கண் இமைக்காமல் பார்த்து ரசித் துக்கொண்டே இருப்பினும் படத்திலுள்ள அத்திரு வுருவக் காட்சி தெவிட்டாத காட்சியாகவே எங்கள் மனக்கண் முன் தோன்றியதும்,

''நானேயோ தவம் செய்தேன் சிவாயநமவெனப்
பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு
அருள்செய்தான்
ஊனேறும் உயிர்வாழ்க்கை ஒறுத்து அன்றே
வெறுத்திடவே''

எனும் மணிவாசகர் பாடல் எங்கள் நினைவிற்கு வரவே, அப்பாடலையே கண்ணீர் மல்கப் பாடித்தொழுதோம், நேரில் கண்டுகளிக்க மறுபிறவியிலாவது எங்களுக்கு திருவருள் வாய்க்கப் பிரார்த்தித்துக்கொண்டோம். இது போன்று இறைவனது காட்சிகளைக் காணும்போதெல் லாம் நாங்கள் முற் பிறவியில் செய்ததவப்பயனோ, மேலும் இப்பிறவியில் செய்த புண்ணியமோ என எண்ணி உளம் பூரித்தோம். நாங்கள் பனி மூடிய இமாலய சிகரத் தில் சிரசு முதல் கால் வரை கம்பளத்தால் ஆன அங்கியை அணிந்திருந்த போதிலும் காற்றின் வேகம் எங்களை நிலையாக, நிற்கமுடியாது நடுக்கமுற்றோம். இங்கிருந்து Keylong, Lahul, Leh, Tibet எனும் இடத்திற்கும் Spiti எனும் இடத்திற்கும் செல்ல பாதைகள் உள்ளன எனக் கேட்டறிந்தோம். ஆயினும் செல்வது உசிதமில்லை. நாங்கள் Rotangpass - எனும் கணவாய் இடத்தில் இருந்த போது அவ்விடத்தில் வாயைத் திறந்து பேசியபோதெல் லாம் வாயிலிருந்து வரும் வெண்புகை, இவர்களெல் லாம் புகை பிடிப்பவர்களா என எண்ணத்தோன்றியது. எங்களுக்கு நாடி நரம்புகளெல்லாம் ஸ்தம்பித்துவிட்டது போல் தோன்றியது. மண்ணில் இருக்கிறோமா? விண் ணில் இருக்கிறோமா என்ற ஐயமும் உண்டாயிற்று நாங்கள் பனி மலையில் கண்ட காட்சியை விவரிக்க வார்த்தைகளே இல்லை என்றே கூறலாம். அதே சமயம் இக்காட்சியைக் காண பிரம்மன் நமக்கு ஆயிரம் கண்கள் படைக்கவில்லையே என்றும் வருந்தத் தோன்றியது.

மாலை 4.30 அளவில் நாங்கள் முதலில் வந்த பேருந்து மூலம் மனாலிக்குத் திரும்பி விட்டோம். அன்றிரவு நாங்கள் தங்கியிருந்த இடத்திலுள்ள சிவன்

அருள்மிகு திரிலோகநாதர்

சன்னதிக்கு சென்று வள்ளிமலையை சேர்ந்த சுப்பிரமணியம் என்ற துறவியோடு சேர்ந்து தேவாரம் திருப்புகழைப் பாடி, காஞ்சியை சேர்ந்த தமிழ்க் குடும்பத்தினர் நடத்தி வரும் சென்னை கேப் என்னும் ஒட்டலில் சாப்பிட சென்றதும் அங்கு சுவரில் சுமார் 3' x 2' உள்ள திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் ஆசிர்வதிக்கும் பாணியில் வண்ணப்படம் மாட்டியிருந்ததை கண்டதும் வியப்பில் ஆழ்ந்தோம்.

தம் வாழ்நாளில் எங்கு சென்றாலும் திருப்புகழையே ஆதாரமாகக் கொண்டு பிரச்சாரம் செய்துவந்த ஒரு புண்ணிய சீலரின் படம் இமயத்திலும் காட்சி அளிக்கிறது என்றால் இவரது புகழுக்கு இதைவிட எடுத்துக் காட்டு வேறு தேவையில்லை. மேலும் இவரது கீர்த்திக்கு, இவரது ஆத்மா ஒன்றுதான் இந்தக் கலியுகத்தில் ஆகாய விமானத்திலேயே பிரிந்து சென்றது. இது யாவரும் கண்டிராத கேட்டிராத ஓர் அரிய செய்தியாகும். எம்பெருமான் கருணையால் முதிர்ச்சி பெற்று வேறு பிரபஞ்சமாயையிலும் மனம் நாடாது, சைவமக்களால் போற்றப்படும் பல சிறந்த நாயன்மார்கள் எல்லாம் இறுதியில் இம்மண்ணுலகில் இருந்தே பூத உடலை விட்டு, இறைவனடி நிழலில் இரண்டறக்கலந்ததாகவே அறியப்பட்ட போதிலும், அதற்கு மாறாக திருமுருக கிருபானந்தவாரியாரின் ஆத்மா ஒன்றுதான் ஏனையோர்களைப்போல் மண்ணுலகில் இருந்து பிரியாமல் விண்ணிலேயே மறைந்தது, இந்தக் கலியுகத்தில் நாம் காணவும் கேட்கவும் கிடைத்த அற்புதமாகும். இதற்கெல்லாம் மூலகாரணம் அன்னார் திருப்புகழையே பற்றாகக் கொண்டு அதனையே வாழ்நாள் முழுவதும் எங்கும் பிரசாரம் செய்த தொண்டேயாகும் எனக் கருதுவதில் பிழை என்ன இருக்க போகிறது?

13.10.99 புதனன்று காலை 7 மணிக்கு மனாலியில் உள்ள வசிஸ்டர் ஆலயத்துக்குச் சென்று, அங்குள்ள வெந்நீர் குண்டத்தில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு, அங்கு உள்ள வசிஸ்டர் உருவச்சிலையை வணங்கிவிட்டு, அங்கிருந்து Hadimba எனும் இடும்பியின் (பீமன் மனைவி) ஆலயத்தையும் தரிசித்து, அவளது மகனான கடோத்கசனின் இருப்பிடத்தையும் கண்டு களித்தோம், மனோ ரம்மியமான அந்த சூழ்நிலையை பார்த்ததும், அந்த இடத்தில் எத்தனை நாள் ஆனாலும் தங்கி இருக்க மனது தூண்டும் விதத்தில் அமைந்துள்ளது. பகல் 1.30 மணிக்கு மதியம் சாப்பாட்டை சென்னை கபேயில் முடித்துக் கொண்டு அங்கிருந்து பேருந்து மூலமாக மண்டி என்னும் இடத்தை இரவு 7 மணி அளவில் அடைந்தோம். அன்றிரவு மண்டியிலேயே தங்கினோம்.

14.10.99 வியாழன் அன்று காலை 7 மணி அளவில் மண்டியிலிருந்து 80 கி.மீ. தொலைவிலுள்ள Baijinath எனும் ஸ்தலத்துக்கு பேருந்தில் புறப்பட்டு பகல் 1.30 மணி அளவில் பஸ் நிலையம் அருகிலேயே உள்ள வைத்யநாத மந்திர் சென்றோம், யாவரும் கேட்பாரற்ற ஒரு மூலையில் இவ்வாலயம் உள்ளதைக் கண்டு மனம் நொந்தோம். இந்த ஆலயத்தில் அப்பரடிகளின் பாதம் பட்டிருந்தால், உழவாரப்பணி மூலம் ஆலயத்தை சீர்ப்படுத்தியிருப்பார் என நினைக்கத் தோன்றியது. கலைஞரது கை வண்ணத்தால் ஆலயம் முழுவதும் கல்லினால் வடிவு அமைக்கப்பட்ட உருவங்களை மெய்சிலிர்க்கும் வகையில் இவ்வாலயம் A.D. 804-ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டதாக அங்குள்ள கல்வெட்டுக்கள் மூலமாய் அறியலானோம். அந்த ஆலய சுற்றுப் புறச் சுவற்றில் ஒரு பகுதியில் அர்த்தநாரீஸ்வரரின் உருவம் எழில் பொங்கும் தத்ரூபமாக கலைஞனின் கை வண்ணத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காண ஒரு நாள் போதாது. தூண்களிலும், சுற்றுப்புற சுவர்களிலும் தென்னாட்டு ஆலயங்களில் காணாத அற்புதமான சிற்பங்களைக் காணும்போதெல்லாம் அவ்விடத்தைவிட்டு பிரியவே மனம் வராது. மேலும் ஊடுருவி பார்க்கக் கண்கள் நாடியது. இராவணன் கையிலையை எடுக்க தவஞ்செய்து ஈஸ்வரனிடம் வரம் வாங்கிய தலம் இது ஆகும். இங்கிருந்து பெற்று வந்த ஆத்மலிங்கம் தான் இராமேசுவரத்தில் வைக்கப் பெற்றது என்று இங்குள்ளோர்களால் கூறப்பட்டது. இன்னும் சிலர் இராமபிரான் மணலில் பிடித்த சிவலிங்கம் என்றும் கூறுவர். இவ்வாலயத்தின் கர்ப்பகிரகத்தில் உள்ள சுயம்பு லிங்கம் மிகவும் பக்திரசம் ததும்பும் விதத்தில் நமக்கெல்லாம் காட்சியளிப்பது அருமையிலும் அருமை என்றே கூறவேண்டும். ராமனது அழகைக் காண 1000 கண்கள் போதாது என வர்ணித்த கம்பர் இங்குள்ள மூர்த்தியை தரிசிக்கும் பாக்கியம் கிட்டியிருந்தால் 4000 கண்கள் படைத்திலனே அந்த பிரம்மா எனச் சாடியிருப்பார்.

"கற்றவர் தொழுதேத்தும் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும்
நா நமச்சிவாயவே''

எனும் பதிகத்தை 5 முறை ஓதி, கண்மலராலும் மனமலராலும், கைமலராலும் போற்றி செய்தோம். கர்ப்பகிரகத்தை விட்டு வரவே மனம் வராது பிரியாவிடை பெற்று, அங்கிருந்து மேலும் சாமூண்டாதேவி எனும் சக்திபீடத்தை முதன் முதலாக நாங்கள் தரிசிக்க பேருந்தின் மூலமாகப் பயணத்தை துவங்கி மாலை 4 மணி அளவில் ஆலயத்தை அடைந்தோம். இத்தேவி பீடமும் 9 சக்தி பீடங்களுள் ஒன்றாகும், இங்குள்ள சக்தியின் பெயர் சண்டிகா எனப்படுவதாகும். பிற்காலத்தில் இப்பெயர் சாமுண்டாதேவி என மருவி வழங்கலாயிற்று என அறியப்பெற்றோம், சண்டா, முண்டா எனும் இரு அசுரர்கள் இழைத்த கொடுமைகளைக் கண்டு

நேரமே நமது செல்வம்

ஒருநாளின் 24 மணி நேரத்தில் (1440 நிமிடத்தில்) நேரத்தை நாம் கீழ்க்காணும் முறையில் பயன்படுத்தலாம்.

1. உடற் பயிற்சிக்கு — 0.20 நிமிடம்
2. காலைக் கடன்கள் முடிக்க — 1.00 மணி
3. மூச்சுப் பயிற்சி — 0.05 நிமிடம்
4. தியானம் எனும் இறைவழிபாடு — 0.05 நிமிடம்
5. உணவு மற்றும் உணவிற்குப் பின் ஓய்வு
   காலை 0.30 மதியம் 1.00 இரவு 0.30 — 2.00 மணி
6. தொழில் அல்லது கல்வி கற்போருக்கு நேரம் — 11.00 மணி
7. குடும்பத்தாருடன் (அ) நல்ல நண்பர்கள் (ஆ) தொலைக்காட்சி பார்ப்பது, பொதுபோக்கு — 1.30 மணி
8. நல்ல நூல்களைக் கற்பதற்கு — 0.30 நிமிடம்
9. சமுதாயச் சிந்தனைக்கு — 0.30 நிமிடம்
10. வயதிற்கேற்ப தூக்கம் — 7.00 மணி

24.00 மணி நேரம்

நேரமே நமது செல்வம். குடும்பம் ஒரு கோவில். நேரத்தை நல்லமுறையில் செலவிட்டு மகிழ்வோடு வாழ்வதே இறைவாழ்க்கையாகும்.

V.N.C. குமார், பவானி

சக்திக்கே அச்சம் உண்டாயிற்று என்றால் பக்தர்களாகிய நாம் எம்மாத்திரம்? உடனே தேவியின் கண்களின் புருவத்திலிருந்தே கோர உருவம் கொண்டு தோன்றிய சக்தியின் அம்சமான தேவதை சண்டா, முண்டா என்ற இரு அரக்கர்களையும் கொன்று, அவர்களது தலையை அம்பிகையின் முன் நிறுத்தினாள். இதைக் கண்டதும் அம்பிகை இச் சக்திக்கு சாமுண்டா எனப்பெயர் வழங்கியதாகவும் வரலாறு கூறக்கேட்டோம். சாமுண்டா தேவியை வணங்கிய பின்னர் உடனே அங்கிருந்து 14 கி.மீ. தொலைவிலுள்ள தர்மசாலா எனும் ஊரை மாலை 6 மணி அளவில் அடைந்து, அங்குள்ள தங்கும் இடத்தில் இரவு தங்கினோம்.

மறுநாள் 15.10.99 வெள்ளி காலை 7 மணி அளவில், சக்தி பீடத்தில் ஒன்றாகிய காங்கரா என்னும் ஸ்தலத்திற்கு பஸ் மூலம் காலை 9.30 மணி அளவில் வந்து அடைந்தோம். இங்குள்ள சக்தியை காங்கரா தேவி, அல்லது வஜ்ரேஸ்வரி என்னும் பெயரோடு அழைக்கின்றனர், இத்தலமும் சக்தி பீடங்களில் ஒன்றாகும். சக்தி தேவியின் இரு மார்பகங்களும் விழுந்த இடம் இது எனக் கேட்டு அறிந்தோம். இத்தலம் 1905-ஆம் வருடம் பூகம்பத்தால் சிதைவுண்டு, 1920-ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்டது எனவும் அறியலானோம். ஜ்வாலாமுகி என்னும் சக்தி பீடத்திலிருந்து 53 கி.மீ. தூரத்தில் உள்ளது. போக்குவரத்து வாகன வசதிகள் உள்ளன. காங்கரா என்னும் இடம் இமாசல பிரதேசத்தின் முக்கிய நகரமாகும். முதலில் இத் தலம் ''சுஸர்மா'' என்னும் அரசனால் ஆளப்பட்டதால் சுஸர்மாபுர் என வழங்கப்பட்டதாக மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது. நாங்கள் சென்றிருந்த சமயம் நவராத்திரி ஆனதால் பக்த கோடிகளின் கூட்டம் சொல்லமுடியாத அளவு காண முடிந்தது. கூட்டநெருக்கடியால் எங்களது மனம் ஒருமைப்பாட்டுடன் தரிசனம் செய்ய இயலவில்லை. உடனே அங்கிருந்து உனா என்னும் மாநிலத்தைச் சேர்ந்த, சிந்த்பூரணி எனும் தலத்துக்குச் சென்றோம். இத்தலமும் சக்திபீடத்தில் ஒன்றாகும். இங்குள்ள தேவியின் திருநாமம், சின்னமஸ்திகாதேவி என்பதாகும். இப்பெயரே பிற்காலத்தில் சிந்த்பூரணி என மருவி வழங்கலாயிற்று என அங்குள்ளவரால் கேட்டறியலானோம். சக்தியின் பாதங்கள் விழுந்த இடம் இது. இங்குள்ள சக்தியின் அதிஅற்புதமான எழில் பொங்கும் விதத்தில் அமைந்த காட்சி எங்களது வாழ்நாளில் என்றைக்கும் மறக்க முடியாததொன்றாகும். இத்தலத்திலும் நவராத்திரி விழா நடைபெறுவதால் மக்களின் கூட்டம் சொல்ல முடியாது, இங்கு வீற்றிருக்கும் சக்தியானவள் மக்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் யாவும் நிறைவுபெற அருளும் சக்தி வாய்ந்தவள் எனக் கேட்டறிந்தோம். இங்கிருந்து ஜ்வாலாமுகி எனும் சக்தி பீடத்தைத் தரிசிக்க மாலை 3.30 மணிக்குப் பேருந்து மூலமாக சென்றோம்.

மாலை 6.00 மணிக்கு ஜ்வாலாமுகி எனும் தலத்தை அடைந்ததும் அன்றிரவே சிறு மேட்டுப்பாங்கான இடத் தில் இருக்கும் ஆலயம் சென்று ஜ்வாலாமுகி தேவியை தரிசித்தோம். இத்தலம் தர்மசாலாவிலிருந்து 56 கி.மீ. தூரத்தில் உள்ளது. போக்குவரத்து சாதனம் வசதியாக அமைந்துள்ளது. சக்திதேவியின் நாக்கு இவ்விடத்தில் விழுந்து உள்ளதாகக் கேட்டறிந்தோம். இவ்வாலயத்தில், சிவன், பைரவராக காட்சியளிப்பதையும் கண்டோம். இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் பிரகாசமான நெருப்பு (ஜ்வாலை) வடிவமாய்எந்தவித உபகரணமும் இன்றி காட்சி தருவது மிகவும் விந்தையாக உள்ளது.

(அடுத்த இதழில் நிறைவுபெறும்)

★★

மலேசிய நாட்டில் முருகன் கோயில்கள்

– அருள் ஞானி கல்பாக்கம் அடிகளார்

மலேசிய நாட்டிலிருந்து அங்கு விசேஷமாக முருகனுக்கு நடக்கும் பத்து நாள் தைப்பூச விழாவிற்கு அழைப்பு வந்தது.

மலேசியன் ஏர்லைன்ஸில் சென்று கோலாலம் பூரை அடைந்தேன். விமான தளத்திற்குத் திரு. சண்முகமும் உடன் பன்னீர்செல்வம் என்பவரும் வந்திருந்தனர். அவரை நான் எப்போதும் பன்னிருகை செல்வன் என்றே அழைப்பேன். அவரது இல்லத்தில் தங்கியிருந்தேன்.

தைப்பூசத்தன்றே அங்கு சென்றதால் குளித்து முடித்து நேராக கோயிலுக்குச் சென்றோம். பத்திரிக்கை மூலமும், T.V. மூலமும் அந்த விழாவினை தெரிந்து வைத்திருந்தாலும் நேரில் பார்த்து மகிழ வேண்டும் என்ற நீண்ட நாள் கனவு அன்று பலித்தது.

அன்று தைப்பூசவிழா மக்கள் பலவகையான காவடிகளை சுமந்துகொண்டு ஆடிக்கொண்டு சென்றது அதி அற்புதமாக இருந்தது. தமிழர்கள் மட்டுமல்ல, மலேசியக்காரர்கள், சைனாக்காரர்கள், ஜப்பானியர்கள், மகமதியர்கள் என்று எந்தவித ஜாதிமத வித்தியாசமின்றி விழாவில் கலந்துகொண்டு இருந்தது பார்ப்பதற்கே மிகவும் ஆனந்தமாக இருந்தது.

ஒருசிலர் மொட்டை அடித்துக்கொண்டு முதுகில் ஆறு கொக்கிகளை மாட்டிக்கொண்டு இருந்தனர். அந்த கொக்கிகளில் மாட்டப்பட்டிருந்த கயிறுகளை ஆட்களே பின்னாலிருந்து இழுத்துச் சென்றனர். சதையே பிய்த்துக் கொண்டு வரும் போல இருந்தது. தலையின்மீது எட்டு அடி அகல மயில் காவடிகள், ஒருசிலர் ட்யூப் லைட்டையே இரண்டு தாடைக்கும் நடுவிலே குத்தி வந்தனர். ஒருசிலர் பெரிய மூக்குமீனை குத்திக்கொண்டுவந்தனர். பெரிய கொக்கிகளில் ஏற்றம்போல தொங்கிவந்தனர், ஒவ்வொரு காவடிகளும் விசித்திரமானவைகளாக இருந்தன.

மூன்று வரிசைகளாக சுமார் 250 படிகளை கொண்ட மலை பத்துமலை. மேலே ஏறினால் அற்புதமான இயற்கையாக அமைந்ததோர் குகைக்கோயில்; பார்த்துக் கொண்டே இருக்கலாம். அங்கே தனி முருகன் கோயிலும் உண்டு. வள்ளிதெய்வயானையுடன் கூடிய முருகனையும் காணலாம். தண்டாயுதபாணியும் உண்டு. முருகன் தனக்கென பல இடங்களில் கோயில்களை உண்டாக்கிக்கொண் டுள்ளான். தமிழகத்தில் ஆறுபடை வீடுகளைப்போல மலேசியாவில் பத்துமலை பிரசித்தமானது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு பத்து மலையில் அமைந்திருந்த மலேசிய ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க குரு குலத்திலிருந்து ஓர் அழைப்பு வந்தது. அங்கே சென்று ஓர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். இங்கே அன்னதானம், மருத்துவம், யோகா முதலியவற்றுடன் வியாழன் தோறும் தியானமும் நடைபெற்று வருகிறது. இங்கே விசேஷமாக ஓர் முருகன்படம் 5 x 5 அடி வரையப்பட்டு வைக்கப் பட்டுள்ளது. அந்த முருகன் உலகில் எங்குமே இல்லாத ஓர் அமைப்பு; சிவயோக தவமுருகன் என்று பெயர். யோகத்தில் அமர்ந்துள்ள முருகன் ஆகும். இதனைக் காலண்டர் வடிவத்தில் வெளியிட்டு வினியோகமும் செய்கிறார்கள்.

அடுத்து பெடாலிங் ஜெயா என்ற இடத்தில் அமைந்துள்ளது ஸ்ரீ சத்திய சன்மார்க்க சங்கம். இது ஸ்ரீலங்கா திருபாலயோகி சுவாமிகளால் நடத்தப்படும் திருமுருகன் திருவாக்கு பீடமாகும். அதி அற்புதமான கோயில். சுவாமிகளை சந்தித்ததில் பெரும் மகிழ்ச்சி அடைந்தேன்.

கோலாலம்பூர் லொராங்ஸ்காட் என்னுமிடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கந்தசாமி கோயில் அழகானதும் அற்புதமான கோயிலும் ஆகும். தமிழ்நாடு மாமல்லபுரத்தை சேர்ந்த திருவன்மீக நாத ஸ்தபதிகளால் கட்டப்பட்டு 1997ல் விமரிசையாக கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

மாரான் மரத்தாண்டவர் கோயில். சில ஆண்டுகளுக்கு முன் ரோடு போட பாதை அமைத்தார்களாம். வழியிலே ஓர் மரம் சுமார் 100 அடிக்கும் மேலான உயரத்தைக் கொண்டது. 12 அடி அகலத்துடன் பாதையின் நடுவில் இருந்ததாம். அதை வெட்டித் தகர்த்து விட்டு ரோடு போட நினைத்து அந்த மரத்தை வெட்டவே அதிலிருந்து இரத்தம் பீரிட்டதாம். எனவே அதை வெட்டாது, சாலையை சற்று வளைத்தே அமைத்து ரோடுபோட்டார்களாம். கோலாலம்பூரிலிருந்து 170 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள திருக்கோயில். 5 ஆண்டுகளுக்கு முன் மலேசியாவிலிருந்து வந்த அன்பர், அக்கோயிலின் விபூதி பிரசாதம் கொடுத்துச் சென்றார். என்றாலும், 5 ஆண்டுகளுக்குப் பிறகு மலேசியா சென்று அந்த சக்திவாய்ந்த மரத்தாண்டவரை தரிசிக்கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

அடுத்து மாக்மண்டின், பட்டர் வொர்த்தில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் கோயில். இக்கோயில் நிர்வாகஸ்தர்கள் வேண்டுகோளுக்கிணங்க, அருளுரை வழங்கச் சென்றிருந்தேன். மேளதாளத்துடன் வரவேற்பு கொடுத்து, பாதபூஜை செய்து, கையில் கும்பம் அளித்து,



மாலை மரியாதைகளுடன் வரவேற்றார்கள். இங்கே திருப்புகழ் அன்பர்கள் நிறைந்திருந்தார்கள். பக்தியுடன் பல வினாக்களையும் எழுப்பினார்கள் முருக பக்தர்கள்.

அங்கிருந்து 2 மைல் பெரியதொரு ''போட்டில்'' சென்றால் பினாங்கு தீவை அடையலாம். இங்கே தண்ணீர் மலை என்ற இடத்திலும் வாலப்பூரிலும் நகரத்தார் தண்டாயுதபாணி கோயில் உள்ளது.

கொடிமலையில் முருகன் கோயிலும், தண்ணீர் மலைக்கோயிலில் பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலும் உள்ளது.

அலோர் ஸ்டார் என்னுமிடத்தில் நகரத்தார் தெண்டாயுதபாணி கோயில் உள்ளது.

சுங்கைபட்டாணியில் முருகன் வள்ளி தேவசேனா சமேதராய் காட்சி தருகிறார்.

கூலிம் என்ற இடத்தில் தண்டாயுதபாணி கோயில் உள்ளது.

சுங்குரும்பையிலும் தண்டாயுதபாணி கோயில் கொண்டுள்ளார். இதுவும் நகரத்தார் கோயிலே.

நிபோங் திபால், பாரிட்புந்தார், சாவிக்கோயில், இங்கும் நகரத்தாரால் பரிபாலிக்கும் தண்டாயுதபாணி கோயில் உள்ளது.

தைப்பிங்கில் தண்டாயுதபாணி கோயில் உள்ளது.

ஈப்போவில் தண்டாயுதபாணி கோயிலும், கல்லுமலை சுப்பிரமணிய சுவாமி கோயிலும் உள்ளது.

தெலுங்குந்தான் தண்டாயுதபாணி கோயில், கிள்ளான் தண்டாயுதபாணி கோயில் உள்ளன.

கெர்லிங் என்ற இடத்தில் சுப்பிரமணியர் ஆலயம் உள்ளது.

கோலாலம்பூர் நகரின் மத்தியில் ஓர் தண்டாயுதபாணி கோயில் உள்ளது. காஜாங் இங்கே சுப்பிரமணிய சுவாமி காட்சிதருகிறார்.

ரசூப் முருகன் ஆலயம்
கோலகுப்பு முருகன் ஆலயம்
கோலப்பிலா கந்தசாமி கோயில்
சிரப்பான் பால தண்டாயுதபாணி கோயில்
மலாக்கா - சன்னாசி மலை ஆண்டவர்
பத்து ரெண்டாம் முருகன்
மூவார் தண்டாயுதபாணி கோயில்
பத்து பஹாட் தண்டாயுதபாணி கோயில்
சிகாமட் சிங்கார வடிவேலர் கோயில்
ஜோகூர் தண்டாயுதபாணி கோயில்

சா சூ குமரன் ஆலயம் எனப் பல கோயில்கள் உள்ளன.

மலேசியாவிலேயே மிகவும் பழமை வாய்ந்தது 100 ஆண்டுகளுக்கும் மேற்பட்டு திகழும் கோலாலம்பூர் நகரத்தார் அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி திருக்கோயிலாகும். இது 1893-ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. இதற்கு 1961, 1971, 1984, 1998 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழா நடந்தேறியது.

இக்கோயிலில் 15 ஆண்டுகளுக்கு முன்பு செய்த வெள்ளி ரதமும் இருக்கிறது. இந்த கோலாலம்பூர் முருகன் கோலாகலமானவர் மட்டுமல்ல. எந்த மூலவருக்கும் இல்லாத ஓர் ஈர்ப்பு சக்தியைத் தன்பால் கொண்டவர். காந்த சக்தி கொண்ட காருண்ய மூர்த்தியாகும். இவர் பங்குனி உத்திரத்தில் லெபோ அம்பாங்கிலிருந்து வெள்ளி ரதத்தில் ஜெகஜோதியாய் அலங்காரபுருடராய் பவனி வந்து பல்லாயிரக்கணக்கானோருக்கு அருள் புரிகிறார். அன்று சுமார் 5000 பேர்களுக்கு அன்னதானமும் அளிக்கப் படுகிறது.

மலேசியாவில் 50க்கும் மேற்பட்ட முருகன் கோயில்களைக் காணலாம். விழாக்காலங்களில் லட்சக் கணக்கான தேங்காய்களைச் சதுர்காய்களாக உடைப்பதைக் காணலாம். இங்குள்ள பற்பல கோயில்களில் சுவாமிக்கு காட்டும் கற்பூர தீபத்தை அடியார்களுக்கு கொண்டுவந்து காட்ட மாட்டார்கள். சுவாமிக்கு தீபாராதனை முடிந்தவுடன் குருக்கள் அந்த தீபத்தை கையால் அணைத்து விடுகிறார்.

மலேசியாவுக்கு செல்லும் முருக பக்தர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று சொல்ல வேண்டும்.

பதினெண் சித்தர்கள்

– செவ்வேள்

1. அகத்தியர் (அனந்த சயனம்)
2. இடைக்காடர் (திருவண்ணாமலை)
3. இராம தேவர் (அழகர்மலை)
4. கமல முனிவர் (திருவாரூர்)
5. கருவூரார் (கரூர்)
6. குதம்பைச் சித்தர் (மாயவரம்)
7. கொங்கணவர் (திருப்பதி)
8. கோரக்கர் (கிர்நார்)
9. சட்டைமுனி (திருவரங்கம்)
10. சுந்தரானந்தர் (மதுரை)
11. தன்வந்திரி (வைத்தீஸ்வரன் கோயில்)
12. திருமூலர் (தில்லை)
13. நந்தீசுவரர் (காசி)
14. பதஞ்சலி (இராமேசுவரம்)
15. பாம்பாட்டிச் சித்தர் (சங்கரன் கோவில்)
16. புலிப்பாணி (பழநி)
17. போகர் (பழநி)
18. மச்சமுனி (திருப்பரங்குன்றம்)

பதினெண் சித்தர் பாடல்கள்

கற்பமென்ன வெகுதூரம் போக வேண்டா
கன்மலையில் குவடுகளில் அலைய வேண்டா
சர்ப்பமென்ன நாகமதோர் தலையில் நின்று
சாகாத கால்கண்டு முனையில் ஏறி
நிற்பமென்று மன முறுத்து மனத்தில் நின்று
நிசமான கருநெல்லிச் சாற்றைக் காணு
சொற்பமென்று விட்டுவிட்டால் அலைந்து போவாய்
துரியமென்று பராபரத்திற் சென்று கூடே.

– அகத்தியர் (அனந்த சயனம்)

மனமெனும் மாடு அடங்கில் தாண்டவக்கோனே - முத்தி
வாய்த்தது என்று எண்ணேடா தாண்டவக்கோனே
சினமெனும் பாம்பிறந்தால் தாண்டவக்கோனே - யாவும்
சித்தியென்றே நினையேடா தாண்டவக்கோனே
ஆசையெனும் பசுமாளின் தாண்டவக்கோனே - இந்த
அண்டமெல்லாங் கண்டறிவாய் தாண்டவக்கோனே
ஓசையுள்ளம் அடங்கு முன்னந் தாண்டவக்கோனே - மூல
ஓங்காரங் கண்டறி நீ தாண்டவக்கோனே!

– இடைக்காடர் (திருவண்ணாமலை)

ஆதிஎன்ற மணி விளக்கை அறிய வேணும்
அகண்டபரி பூரணத்தைக் காண வேணும்
சோதி என்ற துய்யவெளி மார்க்கமெல்லாம்
சுகம்பெறவே மனோன்மணி என் ஆத்தாள்தன்னை
நீதி என்ற பரஞ்சோதி ஆயி பாதம்
நிற்குணத்தில் நின்றநிலை யாரும் காணார்
வேதி என்ற வேதாந்தந் துள்ளே நின்று
விளங்குவதும் பூசை இது வீண்போ காதே.

– இராமதேவர் (அழகர்மலை)

நாட்டுவாய் மவுனமது நடுக்கண் பாரு
நலமான பரியங்கி மூலம் பாரு
ஊட்டுவாய் குண்டலிதான் நடுவாம் மூலம்
உத்தமனே வாசியது பூருவ மையம்
தீட்டுவாய் சிவயோகம் ஒளியைப் பாரு
சிங்கென்று வங்கென்று தெளிந்துபாரு
ஆட்டுவாய் இந்தவிதம் யோகம் பார்த்து
அப்பனே ஆதிகுட்சம் பத்தி ஏறே!

– கமலமுனிவர் (திருவாரூர்)

பார்த்தவர்கள் செய்தொழிலும் மனமும் வேறாய்ப்
பலநூலைப் படித்துப்படு குழியில் வீழ்வார்
ஏற்றபடி மனம் போனாற் புத்தி போச்சே
ஏழைமதி போகாதே என்தாய் பாதம்
போற்றுதற்கே ஐவரையும் மனத்தில் ஒன்றாய்ப்
புத்திசித்தம் ஓர் நிலையில் நிறுத்தி வாசம்
பூத்தமலர் எடுத்துத்திருப் பாதம் போற்ற
பொறிஐந்து கருவிகர ணாதி போமே.

– கருவூரார் (கரூர்)

கண்டாரை நோக்கிக் கருத்தோடு இருப்பார்க்குக்
கொண்டாட்டம் ஏதுக்கடி? குதம்பாய்!
கொண்டாட்டம் ஏதுக்கடி?
காலனை வென்ற கருத்தறி வாளர்க்குக்
கோலங்கள் ஏதுக்கடி? குதம்பாய்!
கோலங்கள் ஏதுக்கடி?
மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி? குதம்பாய்!
தேங்காய்ப்பால் ஏதுக்கடி?
தன்னை அறிந்து தலைவனைச் சேர்ந்தோர்க்குப்
பின்னாசை ஏதுக்கடி? குதம்பாய்!
பின்னாசை ஏதுக்கடி?

– குதம்பைச் சித்தர் (மாயவரம்)

ஊத்தைச் சடலம் என்று எண்ணாதே இதை
உப்பிட்ட பாண்டமென்று எண்ணாதே
பார்த்த பேருக்கே ஊத்தையில்லை இதைப்
பார்த்துக் கொள் உன்றன் உடலுக்குள்ளே

உச்சிக்கு நேராய் உண்ணாவுக்கு மேல்நிதம்
வைத்த விளக்கும் எரியுதடி
அச்சுள்ள விளக்கு வாலையடி
அவியாமல் எரியுது வாலைப் பெண்ணே!

- கொங்கணவர் (திருப்பதி)

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

- திருமூலர் (தில்லை)

வாழ்வுறவே வந்துபதி வழியைக் காட்டி
வழங்கிடுவேன் வாதையறத் திறவு கோலில்
தாழ்மையெலாம் அகன்றிடமுத் தனங்கள் ஓங்கத்
தக்கபொரு விந்நூலைக் கண்டு சொன்னேன்
ஊழ்வினைகள் அகற்றுதற்காய் உரைத்தேன் சித்தன்
உடல்பொருளும் ஆவியுடல் நீங்கா துய்யச்
சூழ்பதினெண் சித்தர்களின் சூட்ச மாறல்
சூதெல்லாம் வெளியுரைத்தேன் இந்நூற் குள்ளே.

- கோரக்கர் (கீர்நார்)

செய்யப்பா விக்கினர்தம் பூசை சொன்னேன்
செயமான சண்முகவன் பூசை கேளு
வையப்பா சங்வங்மங் சரவணாய
வளமாக அனாகதத்தில் பூசை பண்ணு
வையப்பா புட்பப்பரி மளங்கள் கொண்டு
மைந்தனே தூபநை வேத்யங் காட்டி
கையப்பா கனகசபை அதிலே பூசிக்
கண்மணியே சண்முகத்தை வரங்கள் கேளே.

- நந்தீசுவரர் (காசி)

காணப்பா பூசை செய்யும் முறையைக் கேளாய்
கைம்முறையாய்ச் சுவடிவைத்துப் பூசை செய்வார்
பூணப்பா சிலபேர்தான் தீபம் வைத்துப்
புகழாகப் பூசை செய்வார் பெண்ணை வைத்தும்
நாளப்பா சக்கரத்தைப் பூசை செய்வார்
நம்முடைய பூசை என்ன மேருப் போலே
ஓதப்பா நாற்பத்துமுக் கோணம் வைத்தே
உத்தமனே! பூசைசெய்வார் சித்தர் தானே!

- சட்டைமுனி (திருவரங்கம்)

தானானது இதுவல்லோ சித்தர் யோகி
தாண்டவமே புரிவர் பெரியோர்கள் அப்பா
வானான மதங்கரே நானுனக்குச் சொன்னேன்
வாய்திறந்து சொல்லார் நாதாக்க தானும்
ஏனான வாலை திரிபுரையைத் தானும்
இதயமதில் இதமாகப் பூசிப் பாய்நீ
கோனான குமரி அவள் ஆட்டம் செய்வாள்
குறிப்பறிந்து வாலையுடன் பூசை பண்ணே!

- பதஞ்சலி (இராமேசுவரம்)

வாயாது தேவருக்கும் ரிஷிகளுக்கும்
மைந்தனே மும்மூர்த்தி தனக்குங் கூட
வாயாது பூசையினி உனக்கு மைந்தா
விட்டகுறை யாயல்லோ வாய்த்தது அப்பா
வாயாது ஒருநாளும் மனிதர்க்கு ஐயா
மகத்தான பூசைஇது கிரியை பூசை
வாயாது என்று சொல்லி விட்டி டாதே
மறவாமல் சிவயோகி மருவிப் பாரே!

- சுந்தரானந்தர் (மதுரை)

நாடுநகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்
நடுவன் வரும்பொழுது நாடி வருமோ?
கூடுபோன பின்பவற்றால் கொள்பயன் என்னோ?
கூத்தன் பதங்குறித்து நின்றாடு பாம்பே!
யானை சேனை தேர்பரி யாவும் அணியாய்
யமன்வரும் போது துணை ஆமோ அறிவாய்?
ஞானஞ்சற்றும் இல்லாத நாய்கட்குப் புத்தி
நாடிவரும் படிநீ நின்றாடு பாம்பே!

- பாம்பாட்டிச் சித்தர் (சங்கரன் கோவில்)

தர்மத்தை எண்ணினவர்க்கு எல்லாம் சித்தி
தவறாது ஒருநாளும் தர்மம் தர்மம்
வர்மவான் என்றக்கால் வினைகள் சேரும்
வலுவான பிணிகளெல்லாம் வந்து போகும்
கர்மங்கள் செய்யாமல் தர்மம் செய்தால்
கருதி வந்த கர்மங்கள் தீரும் பாரு!
தர்மவான் என்றக்கால் சொல்வேன் கேளு
தயவாக மறப்பெல்லாம் சொல்வேன் பாரே!

- தன்வந்திரி (வைத்தீசுவரன் கோயில்)

கேளே நீ கலியுகத்தில் இருநூற் றைந்தில்
கேசரிபோல் புலிப்பாணி பேரும் பெற்றேன்
சூளே நீ ஜலம் திரட்டிக் கரத்தில் ஏந்தி
சுகமாக வேங்கையின் மேல் ஏறிச் சென்று
நாளே நீ சிவகிரியில் தண்ட பாணி
நாதருக்குப் பூசித்து அருளைப் பெற்று
ஆளே நீ போகர் உடைய குகைமேல் அய்யா
அஷ்டசக்தி பதிதனிலே வாழ்ந்தேன் பாரே!

- புலிப்பாணிச் சித்தர் (பழநி)

அருள்மிகு புலிப்பாணிச்சித்தர்

தியானித்தே உள்ளடக்கிப் பூசை செய்வார்
செயகண்டி சங்கோசை காதிற் கேட்கும்
தியானிப்பார் சிலம்பொலியின் இயக்கம் கேட்கும்
சிதம்பரமா நடனத்தின் செயலுங் காணும்
தியானிப்பார் சச்சிதானந்த வெள்ளந் தன்னைத்
தெவிட்டாமல் உண்டிருப்பார் தேவி ஈவாள்
தியானிப்பார் அனுதினமும் சிவன்தேவி பதத்தில்
திடமாக மனவிலங்கு மாட்டு வாரே.

- போகர் (பழநி)

கைதனைப் பிடித்து நீயும்
கடவுளைப் பார்த்து எண்ணி
உய்யதோ அல்ல வென்று
உத்தரி நாடி பார்க்க
பையவே தொடரும் தொட்டுப்
பகைப்பது கண்ட போதே
மெய்தனிற் குணங்கள் கண்டு
மேவியே விளம்பி டாயே!

- மச்சமுனி (திருப்பரங்குன்றம்)

சித்தர்கள் வாழி! சிவன் வாழி! முனி
தேவர்கள் வாழி! ரிஷி வாழி!
பத்தர்கள் வாழி! பதம் வாழி! குரு
பார்புகழ் தண்டபாணி வாழியவே!

★ ★ ★

திருக்கையினால் பற்றப் பெற்ற திருத்தொண்டர்கள்

- சேதுசிவா

மேலாளும் அறங்காவலர், அருள்மிகு மாணிக்கவாசகர் திருக்கோயில், சின்னமனூர்

சைவசித்தாந்த சாத்திரங்களில் தீட்சை பல வகையாகப் பேசப்படுகின்றது. அவைகளில் பரிச தீட்சை என்று ஒன்று. பரிச தீட்சையாவது, ஆசாரியன் தன் வலது கையைச் சிவன் கையாகப் பாவித்து மாணாக்கன் தலை மேல் வைத்து அவனின் அஞ்ஞானத்தை நீக்கி மெய் ஞானத்தை அடையச் செய்வது ஆகும். தீ என்றால் கொடுத்தல்; சை என்றால் குறைத்தல். பாசவலிமையைக் குறைத்து ஞானத்தைக் கொடுத்தல். பரிச தீட்சை என்பது, கோழி தன் உடலின் பரிசத்தால் - வெப்பத்தால் - முட்டையிலிருந்து குஞ்சுகளை வெளிப்படுத்துவது போல் ஆசாரியன் தன் கையைச் சீடனின் தலைமீது வைத்துப் பரிச உணர்வினால் சீடனுக்கு ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தினை நீக்குவது. இது வடமொழியில் ஹஸ்த மஸ்த சையோகம் என்று கூறப்படுகின்றது.

மேலும் அச்சாத்திரங்கள், மக்களை ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மூன்று மலங்கள் - குற்றங்கள் - பற்றி உள்ளன என்றும்; இம் மூன்று மலங்களும் உள்ளவர்களைச் சகலர் என்றும்; மாயை நீங்க மற்ற இருமலங்கள் பொருந்தியவர்களைப் பிரளயாகலர் என்றும், ஆணவம் மட்டும் பொருந்தியவர்களை விஞ்ஞானாகலர் என்றும் பாகுபடுத்தி; இறைவன் சகலருக்குக் குருநாதர் மூலம் படர்க்கையிலும், பிரளயாகலருக்குத் தடத்தத் திருமேனியில் முன்னிலையிலும், விஞ்ஞானாகலருக்குத் தன்மையில் உள்நின்று உணர்த்தியும் மெய்யறிவினை ஞானத்தினை - புகட்டுவான் என்றும் கூறுகின்றன.

எண்குணங்களில் ஒன்றான இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் உள்ள இறைவன் தம் திருக்கரத்தினால் பற்றுவது என்பது பெரும் பேறாகும்.

தெய்வச் சேக்கிழார் விரிவாகப் பாடிய அறுபத்து மூன்று திருத்தொண்டர்களும் சிவபெருமானிடம் தாங்கள் கொண்ட உண்மையான அன்பினாலும், தொண்டினாலும் கொண்ட கொள்கையில் வழுவாது உறைப்பாக இருந்ததினாலும் மலபரிபாகம் உற்று, இருவினை ஒப்பு அடைந்து, சத்திநிபாதம் கிடைக்கப் பெற்ற நிலையில் இருந்தவர்கள் ஆகையால் சிவபெருமானின் அருளுக்கு ஆளாகிச் சிவப்பேறு அடைந்துள்ளார்கள்.

அந்த அறுபத்துமூவரில் மற்றவர்கள் பெறாத சிறப்பான பேற்றினை ஐவர் மட்டும் பெற்றுள்ளார்கள். அந்த ஐவரும் சிவபெருமானின் திருக்கரத்தினால் பற்றப் பெற்ற பெரும் பேற்றினை உடையவர்களாக ஆகின்றார்கள்.

திருமுனைப்பாடி நாட்டின் திருநாவலூரினில் சடையனாருக்கும் இசை ஞானியாருக்கும் திருமகனாக அவதாரம் செய்து, நம்பியாரூரன் என்று பெயர் சூட்டப் பெற்று, நரசிங்கமுனையரையர் எனும் மன்னனால் வளர்க்கப் பெற்று, திருமணப் பருவம் எய்தி; புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்து கொள்ள, மன்னருக்கு உரியதும் வைதிகத்திற்கு உரியதுமான ஒப்பனையுடன் திருமணப் பந்தலில் சுந்தரர் மணக் கோலத்தில் இருக்கும்பொழுது, கயிலைமலைக் கடவுள், பேரழகின் முதிர்ந்த வடிவமோ அல்லது முதுமையின் வடிவமோ என்னும்படியான கிழவன் வடிவில் மணப் பந்தரிடையே வந்து, ''நான் கூறுவதனை எல்லோரும் கேளுங்கள்'' என்று கூறி; சுந்தரரைப் பார்த்து'' எனக்கும் உனக்கும் உள்ள இசைவினால் - தொடர்பினால் - ஒரு பெரு வழக்கு உள்ளது; அதனை முடித்து விட்டுப் பின்பு நீ திருமணம் செய்து கொள்'' என்றார்.

சுந்தரர் அவரிடம் ''உமக்கு என்னிடம் வழக்கு உளதாயின் அது முடிக்காமல் நான் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்; வழக்கினைக் கூறும்'' என்றார். அக்கிழவர், ''மறையோர்களே! இந்த நாவலூரான் என் அடிமை; இதுதான் நான் கூறுவது'' என்றார்.

சுந்தரர், ''இந்த மறையவர் கூறியது நன்றாக இருக்கின்றது''. என்று கூறிச் சிரித்து, ''குற்றமற்ற அந்தணர்கள் வேறு ஒரு அந்தணருக்கு அடிமை என்று நீர் பேச இன்று தான் கேள்விப்படுகின்றோம். இந்த அந்தணன் பித்தனோ!'' என்று கூறி, ''நீர் கூறிய அடிமை ஓலையைப் பார்ப்போம், கொடும்'' என்று கேட்க, கிழவர் ''நீ ஓலையைப் பார்க்கக் கூடியவனா? சபையில் காட்டுவேன்; நீ வேலை செய்யத்தக்கவன்'' என்று கூறவும்; நம்பியாரூரர் கோபங்கொண்டு வேகமாக அக்கிழவரை நெருங்கிச் செல்லவும்; அவர் மணப்பந்தலில் ஓட, அவரைத் தொடர்ந்து ஓடி ஓலையைப் பறித்துக் கிழித்து எறிந்தார்.



உடனே அக்கிழவர் ஆரூரரைத் தம் திருக்கையினால் பற்றிக் கொண்டு, ''இது முறையாகுமா?'' என்று ஒரு முறை முறையிட்டார்.

அருமறை முறையிட்டு இன்னும்
அறிவதற்கு அரியவர் பற்றி
ஒருமுறை முறையோ'' என்ன

மறைகள் ஓலமிட்டும் அறிவதற்கு அரியவரான அரனார் தம் திருக்கையினால் நம்பியாரூரரைப்பற்றினார். இயல் பாகவே பாசங்களின் நீங்குதல் குணத்தானாகிய இறை வன் பரிசம் ஏற்பட்டவுடன் சுந்தரர் காந்தத்தைச் சேரும் கடிய இரும்பினைப் போல் அக்கிழவரின் (திருமுக ஒளியின்) பின் சென்றார்.

இவ்வாறு திருக்கையினால் பற்றப்பெற்ற முதலா வது திருத்தொண்டர் சுந்தரர் ஆவார்.

பொத்தப்பி நாட்டின் உடுப்பூரில் வேடுவர் தலை வன் நாகனுக்கும் அவனின் மனைவி தத்தைக்கும் மகன் பிறந்தான். திண்ணன் என்று பெயரிட்டு, கருத்தாக வளர்த் தனர். திண்ணன் வளர்ந்து பதினாறு வயதில், தந்தை வேடுவர் தலைமைப் பொறுப்பினைக் கொடுக்க ஏற்று, கன்னி வேட்டைக்குச் சென்றான். வலையை அறுத்துக் கொண்டு ஓடிய வலிய பன்றியின் பின்னே வெகு தூரம் ஓடித் தன் உடைவாளால் அப்பன்றியைக் கொன்று, அதனைச் சுட்டுப் பசியாற வேண்டும் என்றால் தண்ணீர் வேண்டுமே என்று வினவ, ''இந்தத் தேக்க மரச் சோலை யைக் கடந்து சென்றால், நீண்ட மலைக்கு அருகில் பொன் முகலி ஆறு ஓடுகின்றது.'' என்று நாணன் கூற; அச் சோலையைக் கடந்து சென்று, காளத்தி மலைச் சாரலைக் கண்டார்.

நாணனிடம், ''இம் மலைமீது ஏறலாம்'' என்று கூற; அவன் ''அங்கு சென்றால் நல்ல காட்சியைக் காணலாம்; குடுமித் தேவரைக் கும்பிடலாம்'' என்றான். அவர் அவனிடம் ''இம்மலையை நெருங்க நெருங்க என்மேல் உள்ள பாரம் குறைகின்றது; விருப்பம் பெருகி வருகின்றது; குடுமித் தேவர் இருக்கும் இடத்தினைக் காட்டு'' என்று கூற முன்பு செய் தவத்தின் ஈட்டம் முடி விலா அன்பினைச் சொரிய, அளவில்லா ஆர்வம் பொங்க, மிக்க அன்புடன் மலை உச்சிக்கு ஏறும் பொழுது, குடுமித் தேவரின் அருள் நோக்கம் அவர் மீது வீழ, முற்பிறப் பின் தொடர்புகள் நீங்கச் சிறந்த ஒளி நிழலிலே ஒப்பில் லாத அன்பு உருவமாய்க் காளத்தி மலையில் எழுந்தருளி யுள்ள கண்ணுதல் கடவுளைக் கண்டார். விரைந்து ஓடி பெருமானைத் தழுவினார்; உச்சி மோந்தார்; மிக்க மகிழ்ச்சியினால் நெடுநேரம் நெட்டுயிர்ப்புடன் நின் றார். மயிர்க்கால் தோறும் புளகம் பொங்க, கண்களில்

ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பாய,'' அடியனுக்கு இவர் இங்கே அகப்பட்டார்! ஆகா!'' என்று கூறினார்.

இறைவன் பசித்திருப்பாரே என்று வேட்டை யாடிய இறைச்சியை, அளவற்ற அன்புடன் அதுக்கிப் பார்த்து, இனியவைகளை ஓர் தேக்கிலைக் கல்லையில் வைத்துக் கொண்டு, பொன்முகலி ஆற்றின் நீரைத் தன் வாய் நிறைய நிறைத்துக் கொண்டு, தன் தலையில் மலர்களைச் சொருகிக் கொண்டு, குடுமித்தேவர் முன்பு சென்று, ஏற்கனவே சுவாமி மீது இடப்பட்டிருந்த மலர் களைத் தன் செருப்புக் காலால் ஒதுக்கி விட்டு, வாயில் உள்ள நீரைத் திருவுருவத்தின் மீது கொப்பளித்துத் தலை யில் சொருகியிருந்த மலர்களைத் தலையை அசைத்துச் சொரிந்து, இறைச்சியை இறைவன் திருமுன்பு வைத்து, ''ஐயனே! மெதுவான இறைச்சியைப் பல்லினால் அதுக் கிப் பார்த்துச் சுவையறிந்து கொண்டு வந்துள்ளேன். இதனை உண்ண வேண்டும்'' என்று வேண்டினார்.

இவ்வாறு ஐந்து நாட்கள் இரவு பகல் கண் துயி லாது காவல் செய்தும் வழிபட்டும் ஆறாவது நாள் இறைச்சியைக் கொண்டு வந்த பொழுது, இறைவனின் வலது கண்ணிலிருந்து இரத்தம் ஒழுகக் கண்டார். வருந்தினார்; மயங்கினார்; உதிரத்தினைத் துடைத்தார்; நிற்கவில்லை. மூலிகைகளின் சாற்றைப் பிழிந்தார். அதற் கும் நிற்கவில்லை. ஊனுக்கு ஊன் என்பதனை எண்ணி, அம்பினை எடுத்து தன் வலக்கண்ணைப் பெயர்த்து எடுத்து இரத்தம் ஒழுகும் கண்ணில் அப்பினார். உதிரம் நின்றது. அதனைக் கண்டு அவர் மகிழ்ச்சியில் குதித்தார். தோள் களைக் கொட்டினார்; ஆடினார்; தன்னுடைய இச் செயல் நல்லது நல்லது என்று சிரித்தார்.

இறைவன் இடக் கண்ணிலிருந்து இரத்தம் ஒழுகு மாறு செய்தார். அதனைப் பார்த்த திண்ணன் ''என்னிடம் இன்னும் ஒரு கண் இருக்கின்றது. அதனையும் பெயர்த்து அக்கண்ணில் ஒட்டுவேன்'' என்று கூறினார். தன் கண் ணைப் பெயர்த்து விட்டால், இரத்தம் ஒழுகும் கண் இருக்கும் இடம் தெரியாதே என்று எண்ணி செருப்புக் காலை உதிரம் ஒழுகும் கண்ணின் அருகில் மிதித்துக் கொண்டு, ஒரு அம்பினை எடுத்துத் தன் கண்ணைப் பெயர்க்க ஊன்றினார். அந்த அளவில் கருணையே வடி வான கடவுள் திண்ணனின் கையைப் பிடித்து, ''நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப'' என்று மூன்று முறை கூறினார்.

செங்கண் வெள்விடைப் பாகர்
 திண்ணனார் தம்மை ஆண்ட
அங்கணா் திருக்கா ளத்தி
 அற்புதர் திருக்கை அம்பால்
தம்கண் முன் இடக்கும் கையைத்
 தடுக்க மூன்றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக்
 கண்ணப்ப நிற்க'' என்று''

குடுமித் தேவர் திருக்கண்ணில் ஊறு கண்டு தன் கண் இடந்து அப்பும் திண்ணனாரின் கையை விடையுடை விமலன் பிடித்து, ''என் வலப்பக்கம் என்றும் நிலையாய் நிற்பாய்'' என்று அருள் செய்தார். இதனினும் பெறுதற்கரிய பேறு வேறு உண்டோ?

பேறினி இதன்மேல் உண்டோ?
 பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறு கண்டு அஞ்சித் தம்கண்
 இடந்து அப்ப உதவும் கையை
ஏறு உயர்த்து அவர்தம் கையால்
 பிடித்துக் கொண்டு ''என் வலத்தில்
மாறிலாய் நிற்க என்று
 மன்னு பேரருள் புரிந்தார்''.

திருக்கையினால் பற்றப் பெற்ற இரண்டாவது திருத் தொண்டர் திண்ணனார் ஆவார்.

பொன்னி நாட்டில் கணமங்கலம் எனும் ஊரில் செல்வந்தராயும், வேளாளர் தலைவராயும் தாய னார் என்பவர் இருந்தார். அவர் சிவபெருமானிடம் மிக்க அன்பு கொண்டு, சம்பா அரிசிச் சோறும், செங் கீரையும், மாவடுவும் நாள் தோறும் இறைவனுக்கு அமுது படைக்கும் சிவத்தொண்டினைச் செய்து வந்தார்.

அவருடைய அன்பின் மிகுதியை உலகுக்கு உணர்த்த இறைவன் அவருக்கு வறுமையை உண்டாக்கி னான். வறுமை அடைந்த போதும் முன்பு தான் செய்து வந்த தொண்டினை அவர் விடவில்லை. கூலியாட்களை வைத்து வேலை வாங்கிய அவர், தானே கூலிக்குக் கதிர் அறுக்கச் சென்றார். கூலியாகக் கிடைக்கும் நெல்லில் செந்நெல்லாகிய சம்பா நெல்லை எல்லாம் சிவனுக்கு திருவமுது படைப்பது என்றும்; கார் நெல்லைத் தான் உண்பது என்றும் கொள்கையுடன் ஒழுகி வந்தார். வயல்களில் எல்லாம் சம்பா நெல்லே விளையும்படி விமலன் செய்தார். தாயனாருக்கு வந்த கூலி அனைத்தும் சம்பா நெல்லாகவே இருந்தது. ''இது அடியேன் செய்த புண்ணியம்.'' என்று எண்ணி அவைகளை அமுதுக்கு என்று ஒதுக்கினார். அவர் உண்பதற்குக் கார் நெல் இல்லை. அதனால் பட்டினி. அவரின் மனைவியார் கொல்லையிலிருந்த கீரைகளைப் பறித்து பலவகைக் கறிகளாகச் சமைக்க இருவரும் உண்டு வந்தனர். தங்க ளுக்கு உணவில்லை என்றாலும் இறைவனுக்கு அமுது படைக்கும் தொண்டினை வழுவாமல் செய்து வந்தார்.

இறைவன் மேலும் சோதனை செய்தார். கீரை யும் கிடைக்காமல் செய்தார். தண்ணீர் மட்டும் பருகித் தொண்டினைச் செய்து வந்தனர்.

ஒருநாள் சம்பா அரிசிச் சோறும் செங்கீரையும், மாவடுவும் எடுத்துக் கொண்டு மனைவியுடன் திருக் கோயிலுக்குச் சென்றார். உணவு உட்கொள்ளாத காரணத்தி னால், நடக்கும்பொழுது சோர்ந்து தடுமாறினார். அவர்

வீழ்ந்துவிடாமலிருக்க மனைவியார் கையால் தடுத்தார். அவர் விழவில்லை. ஆனால் அவர் கூடையில் வைத்துச் சுமந்து சென்ற சோறும், கீரையும், மாவடுவும் பூமி விரிசலில் - நிலவெடிப்பில் - சிந்தின.'' துன்பம் தீர்த் தருளும் இறைவன் அமுது செய்யும் அப்பேறு தீவினை யுடையவனாகிய நான் இன்று பெறவில்லையே'' என்று வருந்தி, விரைவில் தன் கழுத்தில் அரிவாளை வைத்து ஊட்டியை அரியலானார். உடனே அம்பலத்தா டும் இறைவன் தம் திருக்கரத்தினை நில விரிசலிலிருந்து வெளிப்படுத்தி தாயனாரின் கையைப் பற்றினார். உடனே விரிசலில் மாவடுவைக் கடிக்கும் ''வெடுக் வெடுக்'' என்று ஒலி வந்தது.

மாசறு சிந்தை அன்பர்
கழுத்தரி அரிவாள் பற்றும்
ஆசில் வண் கையை மாற்ற
அம்பலத்து ஆடும் ஐயர்
வீசிய செய்ய கையும் மாவடு
விடேல் விடேல் என்று
ஓசையும் கமரில் நின்றும்
ஒக்கவே எழுந்தது அன்றே.

சிவனின் திருக்கை ஊட்டியை அறுக்கும் கையைப் பற்றியவுடன், அரிவாளால் கழுத்தில் ஏற் பட்ட ஊறு நீங்கியது.

திருக்கை சென்று அரிவாள் பற்றும்
திண்கையைப் பிடித்த போது
செருக்கொடு அங்கு ஊறு நீங்க

இறைவன் காளை வாகனத்தில் காட்சி கொடுத்து ''நீ செய்த செயல் நன்று; உன் மனைவியுடன் என்றென் றும் சிவலோகத்தில் வாழ்வாய்'' என்று அருள் செய்தார்.

நன்றுநீ புரிந்த செய்கை
நன்னுதல் உடனே கூட
என்றும் நம் உலகில் வாழ்வாய்.

திருக்கையினால் பற்றப் பெற்ற மூன்றாவது திருத் தொண்டர் அரிவாள் தாயனார் ஆவார்.

சோழ நாட்டில் திருச்சேய்ஞலூரில் எச்சதத்தன் என்ற மறையவருக்கும், பவித்திரை என்கின்ற பத்தினிக் கும் விசார சருமர் அவதரித்தார். அவருக்கு ஏழு வயதில் பூணூல் சடங்கு நிறைவேற்றப்பட்டது. அவர் வேதம் பயில மாணவர்களுடன் செல்லும்பொழுது, பசுக் கூட்டத்தினை ஓட்டிச் சென்ற ஆயன் பசு ஒன்றினைக் கோலால் அடித்தான்.

பசுவினை அடிப்பதிலிருந்து ஆயனை விலக்கி, ''சிவபெருமான் திருமஞ்சன நீராட்டலுக்கு பசு பஞ்ச கவ்யம் கொடுக்கின்றது; பசுவின் உடலில் தேவர்கள் அனைவரும், தீர்த்தங்கள் அனைத்தும் உள்ளனர். திரு நீற்றிற்குச் சாணம் கொடுக்கின்றது; அதனை அடிக்கலாமா? இன்று முதல் நானே பசுக்களை மேய்த்துக் கொள்கிறேன்'' என்று அவர் கூறி; பசுக்களை நல்ல புற் களை மேய்ப்பித்தும், நல்ல தண்ணீரைக் குடிப்பித்தும், குளிர்ந்த நிழலில் இளைப்பாறச் செய்தும்; மாலையில் அவைகளை இல்லங்களில் சேர்ப்பித்தும் வந்தார்.

அவருடைய வளர்ப்பினால் பசுக்கள் செழிப்புடன் வளர்ந்து, கறக்காமலே மடியிலிருந்து பாலைச் சொரிந் தன. அதனைப் பார்த்த விசாரசருமர் வீணாகக் கீழே சிந்தும் பாலைச் சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் செய்யலாமே என்று எண்ணி, மண்ணியாற்றங்கரையில் அத்திமர நிழலில் மணலால் கோயிலும், சிவலிங்கமும் அமைத்து, ஒழுகும் பாலைக் குடங்களில் பிடித்துச் சிவ லிங்கத்திற்குத் திருமஞ்சனமாட்டி, அத்தி மலர்களை யும், முல்லை மலர்களையும், தளிர்களையும் சூட்டி; அருச்சனை செய்து வழிபாடு செய்து வந்தார்.

அயலான் ஒருவன் அவரின் அன்பின் திறத் தினை உணராமல், அதனை ஊர்ப் பொது மன்றத் திலிருந்த அந்தணர்களுக்கு அறிவித்தான். அவர்கள் தந்தை எச்சதத்தனை அழைத்து விசாரசருமரின் செய்கையைக் கூறிக் கண்டித்தனர்.

விசாரசருமர் வழக்கம் போல் பசுக்களை ஓட்டிச் சென்ற பின்பு, அவரின் தந்தை மறைவாகப் பின் தொடர்ந்து ஒரு மரத்தின் மீது ஏறித் தன் மகனின் செய லைக் கவனித்தான்.

நாள் தோறும் செய்து வந்தபடி விசாரசருமர் அன்றும் மணலில் மண்டபம், கோயில், சிவலிங்கம் அமைத்து, பாலைக் குடங்களில் பிடித்து அபிடேகம் செய்து, மனம் ஒன்றி வழிபாடு செய்து கொண்டிருந்தார். அதனைப் பார்த்த தந்தை எச்சதத்தன் கோபம் கொண்டு, மரத்திலிருந்து இறங்கி மகனின் முதுகில் கைத்தடியால் ஓங்கி அடித்தான். அவர் அதனை உணரவில்லை. தன் முதுகில் அடி விழுந்ததனையும் அறியாமல், பாற் குடங்களை எடுத்து அபிடேகம் செய்து கொண்டிருந் தார். மேலும் சினம் கொண்ட தந்தை பாற்குடங்களைக் காலால் உருட்டினான். பாற்குடங்களை உருட்டியது தன் தந்தையே என்று அறிந்தும், சிவஅபசாரம் செய்த தற்குத் தண்டனை அடைய வேண்டும் என்று எண்ணி ஒரு கோலை எடுத்தார். பெருமான் அருளால் அது மழு ஆயிற்று. அதனை எறிந்தார். எச்சதத்தன் கால்கள் அத னால் துண்டிக்கப்பட, அவன் கீழே விழுந்து இறந்தான். விசாரசருமர் மீண்டும் சிவவழிபாட்டில் மூழ்கினார்.

உடனே, பூத கணங்கள் சூழ, தேவர்கள் வேதம் ஓத, சிவபெருமான் சத்தியுடன் விடை வாகனத்தில் காட்சி கொடுத்தார். பாலகனார் பணிந்து வணங்கினார். பரம்பொருள் அவரைப்பற்றி எழுப்பி ''நம் பொருட்டு பெற்ற தந்தையை மழுவால் எறிந்தாய்; அடுத்து உனக்குத் தந்தை நாமே'' என்று கூறி; அவரை அணைத்து, தடவிக் கொடுத்து, உச்சி மோந்து மகிழ்ந்தார்.

தொடுத்த இதழிசூழ் சடையார்
துணைத்தாள் நிழற்கீழ் விழுந்தவரை
எடுத்து நோக்கி நம் பொருட்டால்
ஈன்ற தாதை விழ எறிந்தாய்
அடுத்த தாதை இனி உனக்கு நாம் என்று
அருள் செய்து அணைத்து அருளி
மடுத்த கருணையால் தடவி
உச்சி மோந்து மகிழ்ந்தருள''

விமலனால் பற்றப் பெற்ற விசாரசருமர் சிவமயமாய்ப் பொங்கி எழுந்த அருளில் மூழ்கினார். தேவர்கள் வாழ்த்த ஒளிமயமாய் விளங்கினார்.

தொண்டர்களுக்குத் தலைமை வகிக்கும்படியும், தாம் உண்ட நெவேத்தியம், உடுத்த உடை, அணிகலன், சூடிய மாலை முதலியவற்றிற்கு உரிமை உடையவராக்கியும்; வழிபாட்டின் பலனைத் தரும் சண்டீசர் பதமும் வழங்கித் தம் திருச்சடைக் கொன்றை மாலையை அவரின் முடியில் சிவபெருமான் சூட்டினார்.

அண்டர் பிரானும் தொண்டர் தமக்கு
அதிபனாக்கி அனைத்தும் நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக்காகச்
சண்டீசன் ஆம்பதம் தந்தோம்
என்றங்கு அவர் பொன் தடமுடிக்குத்
துண்டமதி சேர் சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.

முன்னால் பேசப்பட்ட திருத்தொண்டர்களுக்கும் கிடைக்காத பேறாக, திருக்கையினால் பற்றப் பெற்றதோடல்லாமல் அணைக்கவும், தடவிக்கொடுக்கவும், உச்சி முகரவும் இவர் பெற்றுள்ளார் என்றால், இவருடைய பெரும் பேற்றினை எவ்வாறு பேசுவது? நால்வர் பெருமக்களும் இவரைச் சிறப்பித்துப் பாடி உள்ளார்கள் என்றால் இவரின் பெருமை என்னே! என்னே!

தொண்டை நாட்டில் திருவொற்றியூரினில் உள்ள சக்கரப்பாடித் தெருவில் வாணிகர் குலத்தில் கலியனார் அவதரித்தார். மிகுந்த செல்வந்தர். சிவபெருமானிடம் மிக்க அன்பு கொண்டு, தொண்டுகளிற் சிறந்ததான திருவிளக்கிடுதலை, ஒற்றியூர் உறையும் படம்பக்க நாதருடைய திருக்கோயிலின் உள்ளும் புறமும் ஆயிரக்கணக்கான விளக்குகளை இரவும் பகலும் ஏற்றி வந்தார்.

இவரின் பெருமையை ஊருக்கு உணர்த்த பெருமான் அவர் செய்து வந்த வியாபாரத்தினை நின்றுவிடச் செய்தார். கூலிக்கு எண்ணெய் விற்று அதன் வருமானத்திலிருந்து அவர் திருவிளக்குத் தொண்டினைச் செய்தார். அதுவும் நின்று விட்டது. எண்ணெய் ஆட்டியும், செக்கு மாடுகளை ஓட்டியும் கூலி வேலை செய்தும் வந்த வருமானத்திலிருந்து அத் தொண்டினைத் தொடர்ந்தார். கூலி வேலையும் கிடைக்கவில்லை. வீட்டினையும், வீட்டிலிருந்த பொருட்களையும் விற்று விளக்கிட்டார். வருமானத்துக்கு வழி இல்லை என்கின்ற நிலை ஏற்பட்டவுடன் தன் மனைவியை விற்க முயற்சி செய்தார். வாங்குவார் எவரும் இல்லை.

படம் பக்க நாதருடைய திருக்கோயிலுக்குச் சென்றார். விளக்கிட ஒரு வழியும் இன்றி உள்ளம் தளர்ந்தார். ''விளக்குத் தொண்டு இல்லாமல் வீண் வாழ்வு ஏன்'' என்று துணிந்தார். அகல் விளக்குகளை வரிசையாக அமைத்தார், திரியிட்டார். எண்ணெய்க்குப் பதில் தன் உதிரத்தையே நிரப்ப எண்ணி, வாள் கொண்டு ஊட்டியை அரியலானார்.

சிவபெருமான் அவரின் வலக் கரத்தினைப் பிடித்து, விடையின் மீது காட்சி கொடுத்து சிவபதம் அருள் செய்தார்.

திருவிளக்குத் திரியிட்டு அங்கு
அகல் பரப்பிச் செயல் நிரம்ப
ஒருவிய எண்ணெய்க்கு ஈடா
உடல் உதிரம் கொடு நிறைக்க
கருவி யினால் மிடறு அரிய
வலக்கையைக் கண்ணுதலார்
பெருகு திருக்கருணை யுடன்
நேர் வந்து பிடித்து அருளி''

திருக்கரத்தினால் பற்றப் பெற்ற ஐந்தாவது திருத்தொண்டர் இக்கலிய நாயனார் ஆவார்.

அறுபத்து மூன்று திருத் தொண்டர்களில் ஐம்பத்தெண்மருக்குக் கிடைக்காத பேறு, மேற்காட்டிய ஐவருக்குக் கிடைத்துள்ளது. இவர்களுக்குக் கிட்டிய அருட்பேறு நமக்கும் கிட்ட நற்றொண்டு புரிவோமாக!.

★★★

சிவபெருமானைக் காண்பார் யார்?

– முனைவர் இரா. கோபாலகிருஷ்ணன்
பேராசிரியர் மற்றும் தலைவர், தத்துவத்துறை, சென்னைப்பல்கலைக்கழகம்.

பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரிபூரண ஆனந்தப்பரம்பொருளாகிய பரமசிவனை யாரா லும் சுட்டிக்காட்டமுடியுமா? அப்படியாயின் யார் அவ ரைக் காண்பது? எப்படிக்காண்பது? உலகம் 'காட்டுதல்' 'காணுதல்' என்பன ஐம்புலன்களாலும் மனத்தாலும் மட்டுமே நடைபெறுகின்றன. புலன்களின் நுகர்ச்சியால் வரும்செய்தியை மனம் பதிவு செய்து அறிவாக மாற்று கிறது. இவை பொருட்களைப்பற்றிய அறிவு. சிவபெரு மான் ஒரு உலகியல் பொருள் அல்லவே. கண்களால் அவன் வடிவையும், கோபுரத்தையும் காணமுடியும்; கால்களால் நடந்துசெல்லவும், கைகளால் கூப்பித் தொழவும், மூக்கினால் வாசனையை நுகரவும், நாவி னால் அவன் புகழைப்பாடவும் முடியும். ஆனால் சிவபெருமானை முழுமையாகக்கண்டு அனுபவிக்க முடியுமா?

அறிவினால் சிவபெருமானைக்காண இயலுமா என ஆராய்ந்தால், 'அறிவு' என்பது பொருள்பற்றியோ அல்லது ஒரு கருத்துபற்றியோ எழும் சிந்தனையில் தோன்றுவது.

> செல்லும் அளவு செலுத்துமின் சிந்தையை
> வல்ல பரிசினால் உரைமின்கள் வாய்மையை
> இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை
> நல்ல அறநெறி நாடுமின் நீரே

என்பது திருமந்திரவாக்கு. முடிந்த அளவுக்குச் சித்தத்தை சிவன்பாலே வைத்து வாய்மைவழிநின்று அறநெறிவாழ் வில் திளைத்து வாழவேண்டும் என்பது சைவத்தில் ஈடு பட்டோரின் கடன். சிவபரம்பொருளைப்பற்றி அளவை இயல்வாயிலாக ஆய்வுசெய்யலாம் என்றால் அவன் காட்சிக்கு உட்பட்ட பொருள் அல்ல. அனுமானத்தால் தீர்மானிக்கலாம் என்றால் அனுமானத்தில் ஒருபகுதி காட்சிக்கு உட்பட்டிருக்க வேண்டும். மறுபகுதியைத்தான் அனுமானிக்கலாம். புகையைக்கண்டால்தான் நெருப்பு உண்டு என்பதை அனுமானிக்கலாம். சிவன் காட்சிக்கே ஆட்படாதபோது எவ்வாறு அனுமானத்தால் அறிய முடியும்? மேலும் ஞானசம்பந்தப்பெருமான், அருட் சோதியாகத்திகழும் பெருமானை அளவையியல் வாயி லாக, ஏதுக்கள் மற்றும் மொழியியல் வாயிலாக அதிகம் சோதிக்கவேண்டாம் என்றும், 'ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகில் அளவில்லை கிளர்க்க வேண்டாம்'' என்றும் ஆணையிடுவதால் அனு மானத்தினால் சிவனைக்காணமுடியாது என்பது தெளி வாகிறது.

சிவஞானசித்தியார் 'அருளினால் ஆகமத்தே அறியலாம் அளவினாலும் தெருளலாம்' என்று கூறு வதிலிருந்து 'நிறைமொழி மாந்தர் வாயிலாக வரும் நற்செய்திகளிலிருந்து சிவனைப்பற்றி அறிந்துகொள் ளலாம். அவனருளால் தெளிவுபெறலாம். எனினும் ஞான சாதனங்கள் மூலம்தான் நம்முளத்தில் அவனைக்காண முடியும். மும்மலங்களின் ஆதிக்கம் ஒழிந்து, ஐயங்கள் தீர்ந்து தெளிவுபெற்றபின் குருவருளால் திருவருளைக் கண்டு இன்புற முடியும் என்று சைவசித்தாந்தம் தெளி வாகக் கூறுகிறது. 'அவனருளே கண்ணாகக்காணின் அல் லால் இப்படியன் இந்நிறத்தின் இவ்வணத்தான் இவ னிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே' என்று அப்பர் பெருமான் பாடுவதிலிருந்து இறைவனைக்காண அவ னருள் அவசியம் என்றாகிறது.

> 'முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்,
> அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்'

என்ற திருமூலரின் வாக்கிலிருந்து உண்மையான ஆனந் தம் ஊனினை உருக்கி உள்ளொளிபெருக்கி உலப் பிலா ஆனந்தம் காண்பதுதான். உள்ளத்தில் சிவனைக் காணவேண்டுமாயின் அவன் காட்டவேண்டும். அவனுக் கும் காண்பவனுக்கும் இணைப்பாக இருப்பது அவ னருள். 'காட்டுவித்தால் யாரொருவர் காணாதாரே, காண் பார் யார் கண்ணுதலாய், காட்டாக்காலே' என்று அப்பர் பெருமான் கூறுவதாலும் 'காயத்துள் அமுதுஊறஊற நீ கண்டுகொள் என்று காட்டிய சேய் மலர்ச்சேவடியான்' என்று மணிவாசகப் பெருமான் அருளிச்செய்வதாலும் இறைவன் அறிவிக்கும் சித்து; ஆன்மா அறியும் சித்து என்பது தெளிவு. அதாவது 'சிவசித்சக்தி' எனப்படும் ஆன்ம அறிவாற்றலின் வாயிலாக ஆன்மா உலகை அறியும்; தன்னையறியும், தன்னுடைய தலைவனை யறியவும் 'சிவசித்சக்தி' என்ற இறையருள் ஆற்றல் வாயிலாகத்தான் சிவனைக்காணமுடியும். சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தால்தான் உள்ளத்தில் உறு பொருளைக் காணமுடியும். ஏனெனில் அவன் சித்தத்துள் தித்திக்கும் தேன். 'சத்தத்தினுள்ளே, சதாசிவம் காட்டி

நூல் மதிப்புரை

நூலின் பெயர் : ஞானதீப ஒளி வல்லநாடு சாது சிதம்பர சுவாமிகள்

நூலாசிரியர் : தெ. சிவகுருபாண்டியன்

நூல்வெளியீடு : ஜெயகார்த்திகேயன் பதிப்பகம் 26, ஸ்ரீராம்நகர், சேலையூர் அஞ்சல், சென்னை - 600 073.

பக்கங்கள் : 140

விலை : ரூ. 24.00

திருநெல்வேலியிலிருந்து, தூத்துக்குடி செல்லும் சாலையில் சுமார் 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அழகிய சிற்றூர் வல்லநாடு.

இவ்வூரில் சண்முகசாது - உலகம்மை தம்பதியரின் தவப்புதல்வராக 20.10.1922இல் தோன்றியவர் சாது சிதம்பர சுவாமிகள்.

இவர் லட்சுமி என்னும் தம் உறவுக்காரப் பெண்ணை மணம்புரிந்தபோதும் இராம கிருஷ்ணப் பரமஹம்சர் - சாரதாதேவி போன்று இவர்கள் இல்லறத்துறவியராய் வாழ்ந்துள்ளார்.

யானை, புலி, பாம்பு போன்ற உயிரினங்களும் சுவாமியின் அன்புக்குக் கட்டுப்பட்ட பல அற்புத சம்பவங்கள் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

மழை வறண்டகாலத்தில் மழையை வருவித்தும் அற்புதம் புரிந்துள்ளார் சுவாமிகள்.

அருட்பா போற்றியுள்ள சுவாமிகள், இராமலிங்க அடிகளாரைப் போன்று சமரச சன்மார்க்க நெறியில் நம்பிக்கை பூண்டு ஜோதிபூஜை செய்து வந்துள்ளார்கள்.

அன்னதானம் புரிந்து, மக்கள் தொண்டே மகேசன் தொண்டாக வாழ்ந்திருந்த சுவாமிகள் 6.6.1981 அன்று பரம்பொருள் ஐக்கியம் ஆனார்.

சுவாமிகளுடைய விரிவான வரலாறு, எளிமையும், இனிமையும் கலந்த நடையில் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. அனைவரும் இந்நூலை வாங்கி இன்புறலாம்.

★★★

சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி' என்ற வினாயகர் அகவலின் கருத்தை இவ்வாறுதான் புரிந்துகொள்ள வேண்டும்.

'ஆளும் நாயகன் கயிலை இருக்கை கண்டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'

என்று சூளுரைத்த அப்பர்பெருமான் அருகிலுள்ள வாவியில் மூழ்கித் திருவையாற்றில் அம்மையப்பராகக் காட்சிபெற்றார். 'கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்' என்று அவர் கூறுவதிலிருந்து இறையருள் துணைசெய்தாலன்றி சிவபரம்பொருளைக் காண்பதரிது. இந்நிலைதான் ஞானநிலை. 'ஞானம் ஈசன் பால் அன்பே' என்று ஞானிகள் பகர்வதால் ஞானக்கண்ணினால் சிவனைக்கண்டு பேரின்பம் பெற்று அனுபவிக்கலாம். 'கண்கள்பெற்றபயன் அவனது திருவிழாப் பொலிவுகண்டு ஆர்தல்' என்பார் சேக்கிழார்.

''ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்நிழ லாம்பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே'' என்றும்
''நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி எனையறியேன் தேர்ந்தவகை - நாடியான்
தன்னாலே தன்னையுங்கண்டு தமைக்காணார்
என்னாமென அறிவார் இன்று.''

என்றும் சிவஞானபோதம் எடுத்துக்கூறுவதிலிருந்து ஞானம் பெற்றால்தான் தன்னையும் தன்னுடைய தலைவனையும் கண்டு இன்புறமுடியும் என்பது தெளிவாகிறது. இந்நிலையில் செலுத்தப்படும் அன்புதான் தூய அன்பு. ஏனெனில் அன்பும் சிவமும் இரண்டற்ற ஒன்றுதானே! அன்பேசிவமாய் அமர்ந்திருக்கவிழைவோர் காயத்துள் கள்ளுண்டு சச்சிதானந்தமாய் விளங்கும் சிவபெருமானைக் கண்ணாரக் கண்டு வாழ்த்தி வணங்க வேண்டும்.

★★★

திருக்கச்சி நம்பிகள்

- திருமதி கோமதி ராகவன், FCA

''ஒன்றாலும் அசைக்கப்படாத உறுதியுடைய வனாய் இந்திரியங்களை வென்று, மனதை ஒருமைப் படுத்தி, ஆத்ம ஸ்வரூபத்தையும் சாதாரண ஞானத்தை யும் விசேஷ ஞானத்தையும் அடைந்தால் திருப்தி யுண்டாகி, ஓட்டையும் கல்லையும் தங்கத்தையும் ஒரே விதமாய் நினைப்பவன், யோகி எனப்படுகிறான்''

(ஸ்ரீமத் பகவத் கீதை 6 - 8)

பூவிருந்தவல்லியின் சிறப்பு

சென்னையருகே அமைந்துள்ள பூவிருந்தவல்லி, அங்குள்ள ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயிலில் வீற் றிருக்கும் தாயாரின் திருப்பெயரைக் கொண்டு விளங்கி வருகிறது. இத்தலத்திற்குப் பெருமை சேர்ப்பன திருக்கச்சிநம்பிகள் அவதாரஸ்தலமான வரதராஜபுர மும், சுவாமி முதலியாண்டான் அவதார ஸ்தலமான பச்சை வாரணப்பெருமாள் கோயிலுமாகும்.

மகாபாரதப் போரில் வென்ற தருமன் இந்த க்ஷேத்திரத்தில் யாகம் செய்து மன அமைதி பெற்றார் என்றும் அக்காரணத்தால் இவ்வூர் ''தர்மபுரி'' என்று முன்பு அழைக்கப்பட்டது என்றும் அறியப்படுகிறது. யாகத்தின் பலனான பெருமாள், பச்சை யானை வடிவத்தில் எழுந்தருளி தருமனுக்கு ஞான உபதேசம் செய்தார் என்று ஸ்தலபுராணம் கூறுகிறது. ஆகையால் ''வாரணக்ஷேத்திரம்'' என்ற பெயராலும் அழைக்கப்படு கிறது. வாரணம் என்றால் யானை என்று பொருள். பின்பு பாண்டிய மன்னர்களால் இவ்வூர் புதுப்பிக்கப் பட்டது. இங்ஙனம் இக்கூற்று பாண்டிய மன்னர்கள் துவாரகைக் கோமான் கண்ணபிரானின் வழி வந்தவர் கள் என்பதற்கு மேலும் ஒரு வரலாற்றுச் சான்றாகிறது.

பூவிருந்தவல்லியின் மற்றுமோர் பெயர் புஷ்ப மங்கலம் என்பதாம். இச்சிறப்பு எவ்வாறெனின் திருக்கச்சிநம்பிகள் இங்குதான் நந்தவனம் அமைத்து காஞ்சி வரதராஜப் பெருமாளுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார்.

திருக்கச்சிநம்பிகள் தோற்றம்

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண் பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. (குறள் 760)

''அறம்'', ''பொருள்'', ''இன்பம்'' இவற்றில் நடு நாயகமாக விளங்கும் பொருளை மிகப் படைத்தார்க்கு ஏனைய இரண்டும் - அறனும், இன்பமும் - எளிய பொருளாகும் என்றவாறு பொருள் ஈட்டுவதில் முனைந் திருந்த வீரராகவன் என்ற வணிகரின் நான்காவது புதல்வ ராகத் திருக்கச்சிநம்பிகள் சௌம்யவருடம் (கி.பி. 1009) மாசி மாதம் மிருகசீர்ஷம் திரு நக்ஷத்திரத்தில் அவதரித் தார். இவரது தந்தையார் இவர்க்கு ''கஜேந்திரதாசர்'' எனத் திருநாமம் சூட்டினார். பச்சைவாரணப்பெருமாளின் ஸ்தல புராணத்தைக் கருதி இவ்வாறு பெயரிட்டிருக்கக் கூடும். திருமழிசையாழ்வாரின் அருளால் அவதரித்தவர் என்பதால் நம்பிகளுக்கு ''பார்கவப்பிரியர்'' என்ற திரு நாமமும் உண்டு.

திருகச்சிநம்பிகளின் புஷ்பகைங்கர்யம்

பகவானுடைய திருவடிகளுக்குப் புஷ்ப கைங் கர்யம் செய்பவர்களுக்குச் சிறந்த பலன்கள் கிடைக்கின் றன என்று பகவத்கீதையும் (9-26) சுவாமிதேசிகன் அருளிய ''பாதுகை சகஸ்ரம்'' என்ற நூலும் கூறுகின்றன.

தனவந்தராகத் திகழ்ந்த திருக்கச்சி நம்பிகளின் தந்தையார் தம் திரண்ட செல்வத்தை நான்கு புதல் வர்களுக்கும் பகிர்ந்தளித்தார். கருவிலே திருவுடைய ராகிய திருக்கச்சி நம்பிகள் வணிகத்தில் நாட்டம் இல்லாத வராய் தனக்களிக்கப்பட்ட செல்வத்தைக் கொண்டு நிலம் வாங்கி நந்தவனம் அமைத்தார். பிரம்மசரிய விரதம் பூண்டு காஞ்சி வரதராஜப் பெருமாளுக்குப் புஷ்ப கைங்கர்யமும் திரு ஆலவட்ட (விசிறி வீசுதல்) கைங்கர்யமும் செய்து வரலானார்.

திருக்கச்சி நம்பிகளின் தெய்வீக ஆற்றல்

''தன் பொன அடியன்றி மற்றொன்றில் தாழ்வு செய்யா
அன்பர் உகந்து இட்டது அணு எனினும் - பொன் பிறழும்
மேருவாய்க் கொள்ளும் விரையார்துழாய் அலங்கல்
மாரிமாக் கொண்டல் நிகர் மால்'' (ஞானசாரம் - 11)

திருக்கச்சி நம்பிகள் காஞ்சி அத்திகிரி அருளா ளர் திருவடிகள் அல்லால் வேறொன்றறியாதவராய் இறைத் தொண்டில் ஈடுபட்டு வந்தார். வரதராஜ புரத்தி லிருந்து காஞ்சிக்கு நறுமணம் பொருந்திய பூமாலை களை நடந்தே கொண்டு செல்வார். வெட்டி வேர்

ஆலவட்டத்தைக் குளிர்ந்த நீர் தெளித்துப் பெருமாளுக்கு உகந்தவாறு வீசுவார். இவ்வாறு தமது சிந்தனைகளை ஒருமைப்படுத்திய திருக்கச்சி நம்பிகள் ஒரு சித்தர் போல் விளங்கி பெருமாளுடன் ஞான திருட்டியில் பேசும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

தமது குருவான யாதவப் பிரகாசருடன் கருத்து வேறுபாடு வந்துவிட்டபோது ஸ்ரீராமானுசர் திருக்கச்சி நம்பிகளை குருவாக அடைய விரும்பினார். ஆனால் நம்பிகளோ ஸ்ரீராமானுசர் பெருமாளின் அவதாரம் என்று அறிந்திருந்தார். ஆகையால் தாம் அவர்க்குக் குருவாவது சாத்தியமில்லை என நினைத்து ஸ்ரீராமானுசர் காஞ்சி வரதராஜப் பெருமாளுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்ய வேண்டும் என்றும், பெருமாளே அவர்க்கு ஆசார்யரைக் காண்பிப்பார் என்றும் கூறினார். ஒரு முறை ஸ்ரீராமானுசர் நம்பிகளை விருந்துண்ண அழைத்தார். தாம் உண்ட பிறகு ஸ்ரீராமானுசர் உண்ணலாகாது என நினைத்த நம்பிகள் அவர் தமது இல்லம் வரும் முன்னதாகவே ஸ்ரீராமானுசரின் இல்லம் சென்று உணவருந்தி சுத்தம் செய்துவிட்டு வந்துவிட்டார். பின் காஞ்சி வரதராஜப் பெருமாளிடம் சென்று அவதார புருஷரான இராமானுசருக்குத் தாம் குருவாக இருக்க இயலாதென்றும் தாம் திருமலை செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் வேண்டினார். ஆறுமாத காலம் திருவேங்கடமுடையானுக்குத் தொண்டாற்றினார். பிறகு பெருமாள், காஞ்சியில் வேனில் வெப்பம் தாளாமல் அவர் அவதியுறுகிறார் என்றும் அங்கு சென்று நம்பிகள் சேவை புரிய வேண்டும் என்றும் அருளினார். நம்பிகளும் காஞ்சிக்கு மீண்டார்.

தமது உடல் தளர்ந்த நிலையிலும் நம்பிகள் புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். அப்போது காஞ்சி வரதராஜப் பெருமாள், திருவரங்கப் பெருமாள் மற்றும் ஸ்ரீநிவாசப் பெருமாளுடன் நம்பிகளுக்குக் காட்சியளித்து இனி வரதராஜபுரத்திலேயே தொண்டாற்ற நியமனம் செய்தார்.

திருக்கச்சி நம்பிகளும் ஸ்ரீஆளவந்தாரும்

''ஒருவனுக்குப் பேறு கிடைக்க வேணுமானால் ஞான அனுஷ்டானங்கள் இல்லாவிட்டாலும் ஒரு பாகவதருடைய சம்பந்தம் கிடைத்தால் அதுவே போதும்'' (ஸ்ரீவசனபூஷணம் 204) என்று பகவத் கைங்கர்யத்துடன் பாகவத கைங்கர்யமும் சேரவேண்டும் என்றிருக்க அப்பேறும், ஆசார்ய சம்பந்தமும் வேண்டி ஞானியான திருக்கச்சி நம்பிகளும் திருவரங்கம் சென்று பரம வைணவ சிரேஷ்டரான பெரிய நம்பிகளைத் தெண்டன் சமர்ப்பித்தார்.

பெரியநம்பிகள் திருக்கச்சி நம்பிகளைத் தமது ஆசார்யரான ஆளவந்தாருடன் சேர்த்தார். ஆளவந்தாரும் திருக்கச்சி நம்பிகளை மிக உகந்து சிஷ்யராக ஏற்றுக்கொண்டார். ''ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கல் பிறப்பு முதலியவற்றையிட்டுத் தாழ்வு நினைப்பது அபசாரமானாப்போலே கௌரவித்து நினையாதொழிகையும் அபசாரமாய்த் தலைக்கட்டும்'' (ஸ்ரீவசனபூஷணம் - 201, 225) என்றபடி ஆளவந்தாரைத் தமக்குக் காட்டிய பெரிய நம்பிகளிடம் திருக்கச்சி நம்பிகள் அளவு கடந்த அபிமானம் கொண்டிருந்தார்.

அவருக்குத் தொண்டாற்ற நினைத்த நம்பிகள் பெரிய நம்பிகள் திருமாளிகைக்குச் சென்று பசுக்களைப் பரிபாலனம் செய்யும் கைங்கர்யம் ஏற்றார். பிள்ளை லோகாசார்யார், ஆசார்ய விஷயத்தில் சுச்ருஷை பண்ண வேண்டிய விதங்களையறிவது சாஸ்த்ரமுகத்தாலும் ஆசார்யனுடைய திருவாக்கினாலும் என்பார் (ஸ்ரீவசனபூஷணம் 274, 275). இக்கருத்தைத் திருவள்ளுவர் இவ்வாறு கூறுவார்.

''அரியவற்றுள் எல்லாம் அரிது பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்''

(குறள் 443)

இதன் பொருளாவது பெரியவர்களை அவர் உவப்பன அறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக் கொள் ளுதல் பேறு எல்லாவற்றுள்ளும் அரிய பேறாகும்.

திருக்கச்சி நம்பிகளும் ஸ்ரீராமானுசரும்

ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு நாலாயிர திவ்யப் பிரபந்தங்களையும் அஷ்டாங்க யோக முறைகளையும் அருளிய நம்மாழ்வார் பொலிவு மிக்க வைணவ துறவி யின் அர்ச்சா அவதார மூர்த்தியையும் கொடுத்து ஸ்ரீமந் நாதமுனிகளின் திருப்பேரராகிய ஸ்ரீஆளவந்தார் தமக்குப் பிறகு வைணவ தர்சன நிர்வாகத்தை அவ ரிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கூறியிருந்தார். ஒருமுறை திருவரங்கத்திலிருந்து காஞ்சிக்கு வந்த ஆளவந்தார், ஸ்ரீராமானுசர் யாதவப் பிரகாசருடன் பேரரு ளாளரை சேவித்து விட்டுச் செல்வதைக் கண்டார். ஆசார்யரின் முகக்குறிப்பை உணர்ந்த திருக்கச்சி நம்பி களும் ஸ்ரீராமானுசரின் விசிஷ்டாத்வைத கொள்கை பற்றியும் குண விசேஷங்களையும் எடுத்துரைத்தார். அப்போதே ஆளவந்தார் நம்மாழ்வார் அருளிய பவிஷ்ய தாசார்யர் ஸ்ரீராமானுசர் தான் என்று தீர்மானித்தார்.

சில காலம் திருவேங்கடமுடையானுக்குத் தொண்டாற்றிவிட்டு காஞ்சிக்குத் திரும்பிய நம்பிக ளிடம் ஸ்ரீராமானுசர் தமது சந்தேகங்கள் சிலவற்றைப் பேரருளாளரின் திருவடிகள் மூலமாகத் தீர்த்து வைக்கக் கோரினார். அதன்படியே திருக்கச்சி நம்பிகளும் பேரரு ளாளரிடமிருந்து அருள் வாக்கினைப் பெற்று ஸ்ரீராமானு சர் கேட்டிருந்த ஆறு விஷயங்களுக்கு விளக்கம் அருளி னார். அவற்றுள் மூன்றாவன சரணாகதி தாத்பர்யம், விசிஷ்டாத்வைத தத்வம் மற்றும் ஸ்ரீராமானுசர் பெரிய நம்பிகளை ஆசார்யராகக் கொள்ள வேண்டும் என்பன.

இதற்குள் ஸ்ரீஆளவந்தாரும் தாம் திருநாடு அலங்கரிக்கப் போவது அறிந்து பெரிய நம்பிகளை ஸ்ரீராமானுசரைத் திருவரங்கத்திற்கு அழைத்துவர நியமித்தார். அப்போது திருக்கச்சி நம்பிகள்தாம் பெரிய நம்பிகளிடம் ஸ்ரீராமானுசரை ஆச்ரயிக்கச் செய்தார். இவ்வாறு பிற்காலத்தில் விசிஷ்டாத்வைத நெறி ஸ்ரீராமானுசரின் நிர்வாகத்தில் தழைத்தோங்கி வளர்வ தற்குத் திருக்கச்சி நம்பிகள் அடிக்கோல் நாட்டினார்.

திருக்கச்சி நம்பிகளின் அருளிச்செயல்கள்

திருக்கச்சி நம்பிகள் வடமொழியில் ''தேவராஜ அஷ்டகம்'' என்னும் நூலை இயற்றியுள்ளார். மேலும் திருமழிசையாழ்வார் அருளிய திருச்சந்தவிருத்தத்திற்குத் ''தனியன்கள்'' இயற்றியுள்ளார். இத்தனியன்களில், புகழ் என்னும் தராசுக்கோலில் திருமழிசை உலகின் மற்ற இடங்களை விட அதிக மகிமை வாய்ந்தது எனக் கூறுகிறார்.

''உலகும் மழிசையும் உள் உணர்ந்து, தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க - உலகு தன்னை
வைத்தெடுத்த பக்கத்தும், மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது''

திருக்கச்சி நம்பிகளும் சனிபகவானிடம் அகப்பட்டார்

திருக்கச்சி நம்பிகளை சனி பகவான் ஏழரை ஆண்டுக் காலம் பிடிக்கும் தருணம் வந்தது. நம்பிகளோ சனிபகவானிடம் தாம் அவதியுறுவதைப் பற்றிக் கவலை யில்லை, ஆனால் பகவத் கைங்கர்யத்தில் இடையூறு விளையலாகாது என அஞ்சுவதாகக் கூறினார்.

''கைங்கர்யமில்லாத போது சேஷத்வம்
துலைந்துவிடுமே என்கின்ற அச்சம்''

(ஸ்ரீவசனபூஷணம் 281) என்றபடி, இருவரின் தருக்கத் தின் முடிவில் சனிபகவான் ''ஏழரை நாழிகைகள்'' பிடிப்ப தாகக் கூறினார். அன்றும் வழக்கம் போல் நம்பிகள் ஆல வட்ட கைங்கர்யம் செய்தார். அப்போது திருவாராதனத் தங்க வட்டிலைக் காணவில்லை, உடன் அரசதிகாரி கள் நம்பிகளை விசாரித்தனர். முடிவில் கோயிலிலேயே வட்டிலைக் கண்டனர். இவ்வாறு ஏழரை நாழிகையானா லும் நம்பிகளும் சனிபகவானின் பிடியில் அகப்பட்டார்.

திருக்கச்சி நம்பிகள் வாழி திருநாமம்

மருவாரும் திருமல்லி வாழ வந்தோன் வாழியே
மாசி மிருகசீரிடத்தில் வந்துதித்தோன் வாழியே
அருளாளருடன் மொழிசொல் அதிசயத்தோன் வாழியே
ஆறுமொழி பூதூரார்க்கு அளித்த பிரான் வாழியே
திருஆலவட்டம் செய்து சேவிப்போன் வாழியே
தேவராஜ அட்டகத்தைச் செப்பு மவன் வாழியே
தெருளாரும் ஆளவந்தார் திருவடியோன் வாழியே
திருக்கச்சி நம்பி இரு திருவடிகள் வாழியே.

★ ★ ★

மலரும் மனிதமும், புலரும் புனிதமும்

- திருமதி இராஜேஸ்வரி விஸ்வநாதன்

பக்தியுடனும் சிரத்தையுடனும் மனிதாபிமானத்துடனும் மனிதர்கள் இருக்கவேண்டிய அவசியத்தை எல்லா சமயங்களும் வலியுறுத்துகின்றன. எனவே மனித மனங்களிலே புனித எண்ணங்களை விதைக்கவேண்டும். மனிதமனங்களிலே புனித எண்ணங்களை விதைக்கும்போதும் சரி, விதைத்தபின்னும்சரி, அதன் வளர்ச்சியைக் கண்காணிக்க வேண்டும். அந்த வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும். நல்லெண்ணம், பொதுநலம், தர்ம சிந்தனை, பிறர்நலம்பேணல், ஈதல், இசைபட வாழ்தல் போன்ற நற்சிந்தனைகளைப் போற்றிவளர்க்க வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு தனிமனிதனின் மனத்திலும் மனிதாபிமானம், அன்பு, கருணை, ஒற்றுமையுணர்வு என்று பலவிதங்களாய் சொல்லப்படுகின்ற மனிதநேயம் மலரும்.

நாம் போற்றும் தெய்வங்களான, முன்மாதிரிகளான நாம் வணங்கும் மகான்கள் ஒருபோதும் பிறரைப் பழித்ததில்லை. மாறாகப் புகழ்ந்திருக்கிறார்கள், பணிந்திருக்கிறார்கள், பிணைந்திருக்கிறார்கள், அன்பால் பிறரைஅடி பணிய வைத்திருக்கிறார்கள். இப்படி மகான்களிலே ஒருதலைப்பட்சம், ஏற்றத்தாழ்வு முதலியவை இல்லாத போது இன்று ஏன் இந்தச் சூழ்நிலை? எனவே மனித நேயம் வளர சமயம்பற்றிய நாட்டத்தோடு, மனித மனங்களிலே மனிதநேயம் வளரவேண்டும் என்பதில்தான் அதிகம் கவனம் செலுத்தவேண்டும். அதிலேதான் அதிக நாட்டம், ஈடுபாடு கொள்ளவேண்டும்.

மலர்கள் மலர்வதோடு, மணப்பதோடு நிற்பதில்லை. உலரும்முன் மகரந்த சேர்க்கையோடு போதிய காய்கனிகளைவிட்டுச் செல்வதுபோல நாமும் நமக்குப் பின்னும் நமது நற்சிந்தனைகளை நம்சந்ததியினருக்கு விட்டுச்செல்லவேண்டும். அப்போதுதான் இன்றும், நாளையும், என்றும் மனிதம் மலரும், மனங்களும் குளிரும், நாடும் வளரும், நாமும் வளர்வோம்.

பசித்தாரது பசியை போக்கச்சொன்ன இராமலிங்க அடிகள் கருணையையும், பழத்தின்சுவையறிந்து ஸ்ரீராமனுக்கு கனிதந்த சபரி பக்திநிறைவையும், சிவபிரானுக்கே தன்கண்களை எடுத்துவைத்த கண்ணப்பன் பக்தியோடு மட்டும் அல்லாமல், பிறர்க்கு நம் கண்களை எடுத்துவைக்கலாம், கொடுக்கலாம் என்ற நன்னெறிதான தர்மசிந்தனையையும், கொடுப்பதற்கே பிறந்த, பிறவி கொடையாளர் கர்ணன், கொடைத்தன்மையையும் நமக்கு சொல்லித் தந்திருக்கிறார்கள்.

நமது இல்லற வாழ்விலும், தாய் தந்தையர், உறவினர் அனைவரும் வருங்கால சந்ததிக்காக பொருட்களைச்சேர்த்து வைப்பது, தென்னை முதலிய மரங்களைப் பயிர் செய்து வைப்பது எல்லாம்கூட ஒருவகையில் மனிதநேயச் சிந்தனையாகும். ஆனால் காலப்போக்கில் நாட்கள் செல்லச்செல்ல, வசதிகள் பெருகப்பெருக, உறவுகள் பிரியப்பிரிய எண்ணங்கள் மாறி மாறி இன்று சுயநலச் சிந்தனைகள் வளரவே, அவை மனங்களிலே ஊன்றி நின்று இன்று மனங்களை ஊனமாக்கிக் கொண்டிருக்கின்றன. அதைச் சரிசெய்ய, மனிதநேயச் சிந்தனையை மீட்டுத்தர ஒரு ஊன்றுகோல் தேவை. அந்த ஊன்றுகோல் எதுவாக இருந்தாலும் சரி. ஆனால் அது எப்படி இருக்க வேண்டும் என்றால் பொதுநலம் காணும் பேழையாக, மனிதம் ஒன்றையே வளர்க்கும் சோலையாக, புனித மலர்களால் கோர்க்கப்படும் மாலையாக, மனிதர்களை மகான்களாக மாற்றக்கூடிய சாலையாக இருக்க வேண்டும்.

எப்படியும் வாழலாம் என்ற அவல்நிலையை மாற்றி இப்படித்தான் வாழவேண்டும், நற்பண்புகளோடு நாம் வாழ வேண்டும் என்ற வகையை, வரையறையை சொல்லுவதாக இருக்கவேண்டும். இதற்கு 'இறை ஒன்றே' என்றுகொண்டு உள்ளன்போடு எல்லோரிடத்தும் பழகவேண்டும். ஒவ்வொருவரின் உள்நோக்கும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கோட்பாட்டில், ஈடுபாட்டில் இருக்குமேயானால் எல்லா நன்மைகளும் விளையும். அந்த இறையை அவரவரின் பிரியத்திற்கு ஏற்றாற்போல, குடும்ப பழக்கவழக்கங்களுக்கு ஒத்தாற்போல, எந்தப்பெயரில் வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளலாம். ஏன்? நம்வாழ்வில் நமக்கே கூட பல பெயர்களுண்டு. அதற்கு அன்பு, செல்வம், ஆனந்தம், அவசியம் போன்ற பலகாரணங்களும் உண்டு. அப்படித்தான் ஆண்டவனை நாம் பலநாமங்களில் அழைத்தாலும் அழைக்கப்படும் பொருள் ஒன்று (இறை என்ற பொருள் ஒன்றுதான்) அழைக்கும் காரணமும் ஒன்று என்று உணர்ந்து அழைத்தால், எப்போது அழைத்தாலும் யார் அழைத்தாலும், எந்த நாமத்தைக் கூறி அழைத்தாலும், எங்கிருந்துகொண்டு அழைத்தாலும் ஆண்டவன் அருள்வார்.

இதனையே திருமூலர் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'', எனவும், பட்டினத்தடிகள் ''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'' எனவும் இப்பாருலகிற்கு உணர்த்திச் சென்றுள்ளார்கள். இக்கோட்பாட்டினைப் பற்றி நின்று, போற்றி வாழ்ந்து, மனிதநேயம் மலரச் செய்திடுவோமாக. ★

வினாவும் விளக்கமும்

- பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D.Litt., Ph.D.

வினா 13 : தண்டபாணிசுவாமிகளை ஏன் 'வண்ணச் சரபம்' என்ற அடைமொழியுடன் அழைக் கின்றனர்?

விளக்கம்: சிவபெருமானின் அறுபத்துநான்கு மூர்த்தங்களில் ஒன்று சரபம். இரணியனை வதைக்கத் திருமால் நரசிங்கமாகத் தோன்றினார். மனிதஉடலும் சிங்கமுகமும் கொண்டதால் அவர் 'நரசிங்கம்' எனப் பட்டார்.. இரணியனை வதைத்தபின் அவரது கோபா வேசத்தைத் தணிக்க சிவபெருமான் எடுத்த கோலமே சரபமூர்த்தம். இவ்வடிவில் அவர் மனிதர் - மிருகம் - பறவை ஆகிய கூட்டுக்கோலம் கொண்டார். அவ் வடிவமே 'சரபமூர்த்தம்' எனப்படும்.

கும்பகோணத்துக்கு அருகில் உள்ள திரு புவனம் என்ற தலத்தில் சரபமூர்த்தத்திற்குச் சன்னதி உள்ளது. சரபமூர்த்தத்திக்குப் பிரதிபயங்கிரா, காளி என்ற இரண்டு சக்திகள் உண்டு.

தெய்வத்திருவுருவங்கள் அனைத்திலும் சரபர் தன்னிகரற்ற ஆற்றல் உடையவர்.

ஆதலால் முற்காலத்தில் தத்தமது துறைகளில் தன்னிகரற்று விளங்கிய அறிஞர்களையும், கலைஞர் களையும் 'சரபம்' என்ற பட்டமளித்துச் சிறப்பித்து வந்தனர்.

'சங்கீத சரபம்' 'சாஸ்திர சரபம்' போன்ற விருது கள் மிகச்சிலருக்கே வழங்கப்பட்டது.

தண்டபாணிசுவாமிகள் 'வண்ணம்' என்ற பாடல் கள் இயற்றுவதில் ஈடு இணையற்று விளங்கியதால் அவரை 'வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள்' என்று போற்றினர்.

வினா 14 : இராமனுடன் காட்டுக்குப் புறப் பட்ட சீதை தனது ஆபரணங்கள் அனைத்தையும் களைந்துவிட்டு மரவுரி தரித்துக் கொண்டாள். அவளை இராவணன் கவர்ந்து சென்ற பொழுது தன்னிடம் இருந்த அணிகலன்களை மூட்டையாகக் கட்டி சுக்ரீவன் இருந்த மலையில் போடுகிறாள். கோசலத்திலிருந்து எதனையும் எடுத்துச் செல்லாத சீதைக்கு அவ்வணிகலன்கள் எங்கிருந்து வந்தன?

விளக்கம் : அத்திரி முனிவரின் மனைவி அநசூயா தேவி. 'அசூயை' என்றால் பொறாமை. 'அநசூயை' என்றால் பொறாமையில்லாதவள் என்று பொருள். அவள் மகாலட்சுமிக்குத் தன் கையால் ஆபரணங்கள் பூட்டி அழகு பார்க்க வேண்டுமென விரும்பினாள். அதற்காகத் தவமும் செய்தாள். மகா லட்சுமியும் காட்சி கொடுத்தாள்.

''மனிதர்கள் எவரும் என்னையோ, அல்லது வேறு தெய்வங்களையோ நேரில் அலங்கரித்துப் பூஜைகள் செய்ய இயலாது. வழிபாட்டு உருவங்களை (அர்ச்சா மூர்த்தங்களை) மட்டுமே அணிசெய்து மகிழலாம். எனினும், என்னை நோக்கித் தவம் புரிந்ததால் நான் எதிர் காலத்தில் - இராமாவதார காலத்தில் சீதையாக வரும் பொழுது உன் விருப்பம் நிறைவேறும்.'' எனக் கூறி மறைந்தாள் மகாலட்சுமி.

வனவாச காலத்தில் அத்திரி முனிவர் இராமரைத் தமது ஆச்ரமத்திற்கு வரவேற்று உபசரித்தார். அப்போது சீதையாக வந்திருந்த திருமகளுக்கு அநசூயை பல் வேறு அணிகலன்களையும் பூட்டி அலங்கரித்து மகிழ்ந் தாள். அநசூயையின் விருப்பம் நிறைவேறியவுடன் அனைத்து நகைகளையும் களைந்து மரவுரி உடுத்துக் கொண்டாள் மைதிலி. அநசூயை தான் அணிவித்த அணி கலன்கள் அனைத்தையும் தன்னுடன் எடுத்துச் செல்ல சீதையை வற்புறுத்தினாள். அவளும் அவற்றை, தன் னுடன் எடுத்துச் சென்றாள். அவற்றைத்தான் மூட்டை யாகக் கட்டி சுக்ரீவன் இருந்த மலையில் போட்டாள்.

அவை தவிர 'சூடாமணி' என்ற அணிகலன் ஒன்றும் அவளிடம் இருந்தது. ஓர் அரிய மாணிக்கக் கல்லை ஜனகர் சிவபூஜையில் வைத்திருந்தார். அத னையே தனது மகளுக்கு உரிய உச்சித்தலை அணிகல னாகச் செய்து அளித்தார். அதைத் தான் சீதை அனுமா னிடம் அடையாளமாகக் கொடுத்து அனுப்பினாள்.

அவ்வாறே இராமர் அடையாளமாகக் கொடுத் தனுப்பிய கணையாழியும் ஜனகர் இராமருக்குத் திருமணக் காலத்தில் அணிவித்த சீதனம்.

ஆகவே, கணையாழி, சூடாமணி, அநசூயை கொடுத்தது ஆகியவை எதுவும் கோசல நாட்டுக்குச் சொந்தமானவை அல்ல.

★★★

வினா 15 : 'பிரதோஷம்' என்றால் என்ன?

விளக்கம் : பிரதோஷம் என்றால் சிறப்பான (விசேஷமான) தோஷம் அல்லது குறைபாடு என்பது நேரிடையான பொருள்.

திருமணம் முதலான மங்கல நிகழ்ச்சிகள் நடை பெறாத மார்கழி மாதத்தை இறை வழிபாட்டில் கழிப்ப தால் 'பீடுடைய' மாதம் என்கிறோம். கிரகணம் போன்ற குறைபாடுள்ள நேரத்தில் செய்யும் மந்திர ஜபம் முதலான இறை வழிபாடுகள் அதிகப் பலன் அளிக்கும் என்பர். அதுபோல் மாதம் இருமுறை வரும் பிரதோஷ காலத்தில் சிவபெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்தால்

தோஷ முள்ள அந்த மாலைப் பொழுது சிறப்புப் பெற்று விடு கிறது. தோஷகாலம் பிரதோஷகாலமாகி விடுகிறது.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்த பொழுது தோன்றிய ஆலகால நஞ்சை உண்டு உலகைக் காத்தான் சிவபெருமான். சற்று ஓய்வெடுத்த பிறகு ஈசன், அமரரும் முனிவரும் காண நந்தியம் பெருமானின் கொம்புகளுக்கு இடையில் 'சந்தியா நிருத்தம்' என்னும் அந்திவேளை நடனமாடினான். அக்காலக் கட்டத்தில் எல்லாத் தெய்வங்களும் சிவபெருமானிடம் லயம் அடைந்து விடுகின்றன. அப்போது ஈசனைத் தரிசிப்போர் பல தெய்வங்களையும் ஒருசேரத் தரிசித்த பயனை அடைகின்றனர் என்பது வைதீகம். அந்த சந்தியா நிருத்தத்தை நினைவு கொள்ளும் உயர்ந்த காலகட்டமே பிரதோஷம் ஆகும்.

அமாவாசை மற்றும் பௌர்ணமிக்கு அடுத்த பதின்மூன்றாவது நாள் (திரயோதசியில்) மாலை வேளைகளில் பிரதோஷ விழா நடைபெறும். நந்தியம் பெருமானுக்கும், சிவபெருமானுக்கும் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் செய்து 'பிரதோஷ நாயகர்' என்ற சிறிய வடிவில், நின்ற கோலத்தில் அம்பிகையுடன் கூடிய திருமேனியை ரிஷப வாகனத்தின் மீது அமர்த்தி ஆலய உட்புறப்பாட்டு உலா நடத்துவார்கள்.

ஈசன் நஞ்சையுண்டு, ஓய்வெடுத்தபின் சந்தியா நிருத்தம் ஆடிய நாள் சனிக்கிழமையாகும். எனவே, சனிப் பிரதோஷம் மிகவும் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

பிரதோஷ வழிபாடு குறித்த செய்திகள் மற்றும் தோத்திரங்கள் அடங்கிய நூல்கள் பல வெளிவந்துள்ளன. மேலும் அதிக விவரங்களை அவற்றில் காணலாம்.

வினா 16 : ஆண் தெய்வங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட தேவிகள் இருப்பதன் காரணம் என்ன?

விளக்கம் : தெய்வங்கள் தேவியருடன் விளங்குவது நம்மைப் போல் இல்லறம் நடத்துவதற்காகவும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளவும் அல்ல.

குழந்தைக்குப் பசி எடுக்கிறது. பால் குடிக்க விரும்புகிறது. அந்த விருப்பம் குழந்தையிடம் இயற்கையாகவே உள்ளது. அந்த இயற்கை விருப்பம்தான் 'இச்சா சக்தி' என்னும் ஆற்றல்.

அழுதால் தாய் தனக்குப் பால் கொடுப்பாள் என்ற அறிவு குழந்தைக்கு இயற்கையிலேயே உள்ளது. அந்த அறிவாற்றலே 'ஞான சக்தி'

பால் குடிக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தைக் குழந்தை தனது அழுகையின் வழியே செயற்படுத்துகிறது. அச்செயற்பாட்டு ஆற்றல்தான் 'கிரியா சக்தி'.

கடவுள் இந்த மூவகை ஆற்றல்களையும் தனதாக்கிக் கொண்டு உலக இயக்கத்தை நடத்துகிறார். அவர் தேவிகளுடன் உடன் உறையும் (சக்தி சமேதராகும்) காரணம் இதுவே.

சிவபெருமான் விரும்பித் தன் தலையில் சூடிய கங்கை இச்சா சக்தியாவாள். இடப்பக்கத்தில் உறையும் உமை கிரியா சக்தியாவாள். அவன் கையில் ஏந்திய சூலம் ஞான சக்தியாகும்.

அவ்வாறே திருமாலின் தேவிகள் மூவர் ஸ்ரீதேவி, பூதேவி, நீளா தேவி ஆகியோரே அம்மூவர்.

முருகனின் துணைவி வள்ளி இச்சா சக்தி. தெய்வயானை கிரியா சக்தி. அவன் திருக்கை வேல்தான் ஞான சக்தி.

தென் மாநிலங்களில் பிரம்மச்சாரியாக விளங்கும் விநாயகருக்கும் வடமாநிலங்களில் மூன்று சக்திகள் உண்டு. சித்தி, புத்தி, வல்லபை என்ற மூவரும் கணபதியின் தேவிகள்.

ஐயனார் என்ற சாஸ்தாவுக்கு, பூரணை புஷ்கலை என்ற இரண்டு தேவியர் உண்டு. மூன்றாவதான ஞான சக்தி அவர் கையில் ஏந்தும் பூச்செண்டு வடிவில் உள்ளது.

ஏன், நைஷ்டிக பிரம்மச்சாரி என்று போற்றப்படும் அனுமாரிடம் சக்தி அம்சம் உண்டு என்றால் வியப்பாக உள்ளதா? சிவாம்சமான அனுமானின் ஆற்றல் மிக்க 'வால்', சக்தி அம்சம் என்பர்.

வினா 17 : சுக்கிரன் என்ற சுக்கிராச்சாரியார் 'அசுர குரு' என்று அழைக்கப்படுபவர். அவரே 'சுக்கிர தசை' என்னும் வாழ்வின் வளமான காலகட்டத்தை அருளுவது எங்ஙனம்?

விளக்கம் : அசுரகுலம் அழிவெய்தும் போதெல்லாம் அதற்குப் புத்துயிர் கொடுத்து வழிநடத்தும் ஆசான் சுக்கிரன். தேவ குருவுக்கும் தெரியாத சஞ்சீவினி வித்தை என்னும், மாண்டவரை உயிர்த்தெழச் செய்யும் மந்திர வித்தை கற்றவர் சுக்கிரன்.

கல்வியிலும், தவத்திலும் சிறந்தவர். சிவபக்தி மிக்கவர். இவரது கடுந்தவத்துக்கு இரங்கி வந்த ஈசன் கண்ணொளியை மீண்டும் பெற அருளினார்.

'தாரா' என்ற சொல் வானத்துச் சுடர்கள் இரண்டை மட்டுமே குறிக்கும். ஒன்று சுக்கிரன். மற்றொன்று செவ்வாய்.

அண்டமே அம்பிகையின் திருவுருவம் என்றால் அவள் அணியும் இரண்டு மூக்குத்திகள் வெள்ளியும் செவ்வாயும் ஆகும். வெள்ளைக்கல் மூக்குத்தி சுக்கிரன் (வெள்ளி). சிவப்புக்கல் மூக்குத்தி செவ்வாய்.

அம்பிகையின் திருவருளுக்குப் பாத்திரமான சுக்கிரனின் நாளான வெள்ளிக் கிழமையே அம்பிகை வழிபாட்டுக்கு உகந்த நாளாகத் திகழ்கிறது.

குற்றவாளிகளுக்குச் சட்ட ஆலோசனை வழங்கி, வழக்கை நடத்தும் குற்றவியல் (கிரிமினல்) வழக்கறிஞர் போலத்தான் சுக்கிராச்சாரியார் அசுர குருவாகத் திகழ்கிறார்.

குற்றவியல் வழக்கறிஞர் குற்றவாளியாக இருப்பதில்லை. அவர்களில் பலர் பெரும் பொருள் ஈட்டி அறச் செயல்களுக்குக் கொடுக்கும் வள்ளல்களாகவும் இருப்பதுண்டு.

அதுபோலத்தான் அசுர குருவான சுக்கிரன் மானுடர்களின் வாழ்க்கையில் 'சுக்கிர தசை' என்னும் வளமான நிலையை அருளுகிறான். அதுவும் இருபது ஆண்டுகள்!

தென்குமரியில் திருவள்ளுவர் சிலை

- கவிஞர் முருகுவண்ணன்



'யான்' 'என' தென்னும் செருக்கறுத்துத் தன்னுயிர்
'தான்' அறப் பெற்றாயெந் தாய்.

வினைகளின் நீங்கி விளங்குமெய்ஞ் ஞான
முனைவன்நீ முப்பால் திரு.

அடியிரண்டால் ஓங்கி உலகளந்தா யன்பின்
வடிவம்நின் வாழ்வே குறள்.

ஏழிரண்டால் மூன்றியற்றி நான்கை அதிலியம்பி
வாழும்நீ வையக் கணி.

அன்பைப் பெருக்கி அருளால் வகுத்தளித்த
இன்குறளே எம்வாழ் வியல்.

மானிடமும் வானுறைந்து வாழத்தந் தாய்முப்பால்
மானிடருள் நீதெய்வ மான்.
கருணா நிதிகாண் குறள்மாட்சி காட்சி
திருவள்ளு வாநின் சிலை.

ஆழிபிற நீந்தாரும் நீந்தவைக்க தென்குமரி
ஆழியினில் நின்றுளனை போன்ம்.

திசையெட்டும் வந்துன் திருக்கோலம் கண்டின்
இசைபாடி ஆடல்கண் ணேறு.

திருவள் ளுவர்க்குப் புகழ் திருத் தொண்டர்
கருணா நிதி கலைஞர் தான்.

வாழி தமிழ்; கலைஞர் வாழி! எழு ஞாயிறு போல்
வாழி திருவள் ளுவர்.

★ ★ ★

குன்றத்தூரில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ''தெய்வச்சேக்கிழார் விழா'' 31.5.2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு நம் ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்றுச் சிறப்புரை ஆற்றிச் சிறப்பித்தார்கள். தொண்டைமண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள் – ஆசியுரை வழங்கினார்கள். திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ஏ. கோதண்டம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம், திருப்புகழ்ச் செல்வர் கவிஞர் மதிவண்ணன், ''திருக்கோயில்'' ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், கலைமாமணி கவிஞர் கே.பி. அறிவானந்தம், கோயிற்கலை வித்தகர் புலவர் எம்.கே. பிரபாகரமூர்த்தி ஆகியோர் ஆய்வரங்கத்தில் கலந்து கொண்டு ஆய்வுரை வழங்கினார்கள். இணை ஆணையாளர் திரு ஜி. இராஜநாயகம் பி.எஸ்சி., பி.எல்., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். சென்னை உதவி ஆணையாளர் திரு அ. சுப்பிரமணியம் எம்.ஏ., பி.எல்., மற்றும் திருமுறை கலாநிதி கலைமாமணி தருமபுரம் ப. சுவாமிநாதன் உள்ளிட்ட ஓதுவாமூர்த்திகள் பலரும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.



இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் திருப்பணிகளை மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்கள், இவ்விழாவிற்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் செயல் அலுவலரும், இணை ஆணையாளருமான திரு கோ. பக்கிரிசாமி பி.எஸ்சி., பி.எல்., அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந் தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,*** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.